Registered as a News paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை [illegible]

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஹூ மீ வைகாசி 2 ஆம் உ    புதன்கிழமை    (16 - 05 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா 20    ஓசை 87

## களுவாஞ்சிக்குடி முகாமிலிருந்து இராணுவம் வெளியேற்றம்

(கோட்டைமுனை)

களுவாஞ்சிக்குடி நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டிடத்தில் நீண்ட காலமாக இருந்துவந்த இலங்கை இராணுவத்தினர் இன்றுடன் தமது முகாமை மூடிவிட்டு முற்றாக வெளியேறிவிடுவார்கள் எனத்தெரிகின்றது. நேற்றில் இருந்து இம்முகாமில் இருந்து இராணுவத்தினர் படிப்படியாக வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இம்முகாமில் முதலில் இலங்கை விசேட அதிரடிப்படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது. இந்திய இராணுவத்தின் வருகையுடன் விசேட அதிரடிப் படைப்பிரிவு வெளியேற இலங்கை இராணுவம் நிலைகொண்டிருந்தது. இம்முகாமினால் கடந்த காலங்களில் அதைச் சூழவுள்ள தமிழ் இளைஞர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆக்கிரமிப்புப் படையுடன் கூடிக்குலாவிய தேசவிரோத ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் - அரசு பேச்சு நடத்தலாமா?

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஆட்சேபம்

ஸ்ரீலங்கா அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்திற்கும் இடையில் நேற்றையதினம் கொழும்பில் தொடங்கிய பேச்சு வார்த்தைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வெறுப்பையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது என நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்அறிக்கையில் இந்திய ஆக்கிரமிப்பு எமது மண் உட்பட்டிருந்த காலகட்டத்தில் ஈ. பி, ஆர். எல், எப்பினர் புரிந்த கொலைகள் கொள்ளைகள் ஆள்கடத்தல் போன்ற மக்கள் விரோதச் செயல்களின் விளைவாக அவர்கள் மீது மக்கள் வைத்திருந்த வெறுப்பும் கோபமும் உலகமறிந்த விடயம்.

இந்த நிலையில் மக்கள் விரோத சக்திகளான ஈ. பி, ஆர். எல். எப். உடன் சிறிலங்கா அரசு பேசிக் கொண்டிருப்பது எமது மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் எதிர்காலம் தொடர்பான ஓர் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் படைகள் எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த காலகட்டத்தில் இத் தீவின் அனைத்து மக்களுமே(சிங்கள மக்கள் உட்பட)ஒன்றுதிரண்டு இந்தியப்படையைவெளியேற வேண்டுமென குரல் கொடுத்தார்கள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் ஈழப் பிரகடனத்துக்கு ஈ. பி. ஆர். எல். எவ். வருத்தம்

(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவையும் சர்வகட்சி மாநாட்டுச் செயலாளர் பிரட்மன் வீரக்கோனையும் ஈ. பி. ஆர். எல். எவ். எம். பிக்கள் இருவரும் மாகாணசபை உறுப்பினர் இருவரும் நேற்றுக் காலை பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்துப் பேசியபோது பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்தனர். இந்தக் கோரிக்கையை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்கு சர்வகட்சி மாநாடுதான் பொருத்தமான இடம் என்று கூறி அதில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் ரஞ்சன் கேட்டுக்கொண்டார். இதுபற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து முடிவுசொல்வதாக தூதுக்குழு தெரிவித்தது. இச் சந்திப்பு ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி என்ற பெயர் கொண்ட ஈ. பி. ஆர். எல். எவ். எம்பிக்கள் இருவரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான பிராட்மன் வீரக்கோனும் கலந்து கொண்டார். நீதி அமைச்ச கலந்துகொள்ளவில்லை.

ஈ. பி. ஆர். எல். எவ். தரப்பில் எஸ். பிரேமச்சந்திரன் எம். பி., கே. யோகசங்

## பரந்தன் தொழிற்சாலை ஜூன் 28 முதல் செயற்படும்

(மட்டக்களப்பு)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை எதிர் வரும் ஜூன் 28ஆம் திகதி மீண்டும் செயல்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொழிற் சாலையின் புனரமைப்பு திருத்த வேலைகள் 60 சதவீதம் இதுவரை பூர்த்தியாகியுள்ளது.

இத் தகவலை பரந்தன் இரசாயன கூட்டுத் தாபன தலைவர்திரு. உபாலிதசில்வா 'ஈழநாதம்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

'ஹம்பஸர்' என்ற குளோரின் சிலிண்டருக்கு நிரப்பும் இயந்திரம் பொயிலர் வேலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாதங்களின் பின்னரே

## சட்டவிரோத மின்பாவனை தென்மராட்சியில் தடை

(சாவகச்சேரி)

சட்டவிரோதமின்பாவனையால் பலஇழப்புக்களும், அசம்பாவிதங்களும் ஏற்படுவதாக மின்சார சபை எழுத்துமூலம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

எனவே சட்டவிரோத மின்பாவனையைமேற்கொள்பவர் யாராயினும் சரி உடனடியாக அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. எஸ். பி. கே. பாப்பா கண்டிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழித் திட்டம் அடுத்த ஆண்டில் அறிமுகம்

(கொழும்பு)

ஒரு மாணவன் 5 - ஆம் ஆண்டை அடையும்போது தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழிகளையும் அறிந்திருக்கும் வகையில் பாடத்திட்டத்தை அமைக்க உள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத் ... ண்டிலிருந்து இ ... தை அமுல் படுத்து ... படி அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை பள்ளிக்கூடங்களில் வழங்கப்படவிருக்கும் சான்றிதழ்களைக் கொண்டு ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் மும்மொழியிலும் பெற்ற அறிவைத் தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

## மதிய போசனம் இடைநிறுத்தம்

# பரந்தன் தொழிற்சாலை ஜூன் 28 முதல் செயற்படும்

(மட்டக்களப்பு)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை எதிர் வரும் ஜூன் 28ஆம் திகதி மீண்டும் செயல்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொழிற் சாலையின் புனரமைப்பு திருத்த வேலைகள் 60 சதவீதம் இதுவரை பூர்த்தியாகியுள்ளது.

இத் தகவலை பரந்தன் இரசாயன கூட்டுத் தாபன தலைவர் திரு. உபாலி தசில்வா 'ஈழநாதம்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

'ஹம்பஸர்' என்ற குளோரின் சிலிண்டருக்கு நிரப்பும் இயந்திரம் பொயிலர் வேலை

(6ஆம் பக்கம் பார்க்க)

# 3 மாதங்களின் பின்னரே பொலிஸார் வெளியேறுவர்

(வவுனியா)

வவுனியா நகரசபைக் கட்டடத்தில் தங்கியுள்ள பொலிஸார் மூன்று மாதங்களின் பின்னரே இவ்விடத்தைவிட்டு முற்றாக விலகிச் செல்வார்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுந்தரலிங்கத்தின் வளவுக் காணியுட்பட சுமார் பத்து ஏக்கர்காணியில் பொலிஸ் நிலையம் அமையும் என்று தெரிவித்த அவர் தண்ணீர்ப் பிரச்சினை காரணமாக உடனடியாக அவ்விடத்திற்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் நேர்முகப் பரீட்சை 10,000 பேர் தோற்றினர்

(திருக்கோணமலை)

அண்மையில் வடக்குகிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற ரிசேர்வ்பொலிஸ் ஆட்சேர்ப்பு நேர்முகப்பரீட்சைக்கு சுமார் பத்தாயிரம் பேர் தோற்றியுள்ளனர்.

மேலும் ஐயாயிரம் பேர் வரை இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இதேபோல நிரந்தர பொலிஸிற்கான நேர்முகப் பரீட்சையில் மேலும் ஐயாயிரம் பேர் வரை தோற்றுவார்கள்.

முடிவடைந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவான விபரங்கள் விரைவில் பொலிஸ் தலைமை அலுவலகத்தால் அறிவிக்கப்படும்.

அதன் பின்னர் தெரிவானவர்களுக்கு பொலிஸ் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவையும் சர்வகட்சி மாநாட்டுச் செயலாளர் பிரட்மன் வீரக்கோனையும் ஈ. பி. ஆர். எல். எவ். எம். பிக்கள் இருவரும் மாகாணசபை உறுப்பினர் இருவரும் நேற்றுக் காலை பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்துப் பேசியபோது பத்தொன்பது அம்சக் கோரிக்கையை முன்வைத்தனர். இந்தக் கோரிக்கையை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்கு சர்வகட்சி மாநாடுதான் பொருத்தமான இடம் என்று கூறி அதில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் ரஞ்சன் கேட்டுக்கொண்டார். இதுபற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து முடிவுசொல்வதாக தூதுக்குழு தெரிவித்தது. இச் சந்திப்பு ஒன்றரை மணிநேரம் நடைபெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி என்ற பெயர் கொண்ட ஈ. பி. ஆர். எல். எவ். எம்பிக்கள் இருவரும் இதே குழுவைச்சேர்ந்த வடக்குக்கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இருவருமாக நான்குபேர்கொண்ட குழுவொன்று நேற்றுக்காலை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினாவைப் பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்துப் பேசியது. அமைச்சர் ரஞ்சனுடன் சர்வகட்சி மாநாட்டுச் செயலாளரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான பிராட்மன் வீரக்கோனும் கலந்து கொண்டார். நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு சமாதானக்குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் கலந்துகொள்ளவில்லை.

ஈ. பி. ஆர். எல். எவ். தரப்பில் எஸ். பிரேமச்சந்திரன் எம். பி., கே. யோகசங்கரி எம்.பி. ஜனாப் அபுயூசுப், எஸ். கிருபாகரன் ஆகியோர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மின்விசிறி இன்றி நோயாளிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் மின்சார விசிறிகள் எதுவும் பொருத்தப்படாததால் தற்போதைய உஷ்ண காலத்தில் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

சில நோயாளிகள் வியர்வை காரணமாக தமது சேட்டுக்களை கழற்றிவிட்டு இருப்பதையும் காணமுடிகிறது.

## இலங்கையிலிருந்து சென்ற

# இந்திய வம்சாவளியினர் ஏழ்மை நிலையில் உள்ளனர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட இந்திய வம்சாவளியினரில் சுமார் 4.60 லட்சம் பேர் இந்தியாவில் மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்கின்றனர் என்று இலங்கையின் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் நிருபர்களிடம் தெரிவித்தார்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட குடும்பங்களின் நிலை பற்றி ஆராய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு குழுவை இந்தியாவுக்கு அனுப்பியது.

அந்தக் குழுவினர் சுமார் எழுபது ஆயிரம் குடும்பங்களின் நிலைகளை ஆய்வு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலை இரண்டாம்தவணை ஆகஸ்ட் 9இல் முடிவு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதிகள் மாற்றமடைந்துள்ளதனால் பாடசாலைகளின் இரண்டாம் தவணையை ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை நீடிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலைகள் இரண்டாம் தவணைக்கென ஜூலை மாதம் இருபதாம் திகதி மூடப்படவிருந்தன.

புதிய ஒழுங்கின் பிரகாரம் ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிக்குப் பதிலாக செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி பாடசாலைகளில் மூன்றாம் தவணை ஆரம்பமாகும்.

# மும்மொழித் திட்டம் அடுத்த ஆண்டில் அறிமுகம்

(கொழும்பு)

ஒரு மாணவன் 5 – ஆம் ஆண்டை அடையும்போது தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழிகளையும் அறிந்திருக்கும் வகையில் பாடத்திட்டத்தை அமைக்க உள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்[illegible]ண்டிலிருந்து இ[illegible]த அமுல்படுத்து[illegible]படி அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை பள்ளிக்கூடங்களில் வழங்கப்படவிருக்கும் சான்றிதழ்களைக் கொண்டு ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் மும்மொழியிலும் பெற்ற அறிவைத் தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

# மதிய போசனம் இடைநிறுத்தம் பாடசாலை இருநேரம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீண்டும் அறிமுகமான பாடசாலை மதிய போசன திட்டம் யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலை ஒன்றில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை குடாநாட்டின் ஏனைய அனைத்துப் பாடசாலைகளும் மதிய போசனத்தை தொடர்ந்து கொடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை கல்விப் பணிப்பாளரால் விடப்பட்ட சுற்றுநிருபத்தின்படி இரண்டு நேர பாடசாலைகள் அமுலில் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். )லோ)

## வாகன வரி அறவீட்டாளர்கள்

# மோசடி கண்டு பிடிப்பால் வருமானம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குவரித்தொகையை பெற்கொள்வதில் கடந்த பலகாலமாகநடந்துவந்தமோசடிகள் தற்போது கண்டு பிடிக்கப் பட்டு கண்காணிக்கப் படுகின்றது.

நகரின் முக்கிய பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களிடம் இருந்து ஒரு சிறு தொகைப் பணம் வரியாக அறவிடப் படுவது வழக்கம் இதனை வரி அறவீட்டாளர்கள் பற்றுச்சீட்டை வழங்காமலே பணத்தை பெற்றுக் கொள்கின்றனர். வாகன சொந்தக் காரர்களுக்கும் சில சலுகைகள் இதில் காட்டப் பட்டு வந்தது தற்போது வீதி ஒழுங்கை பராமரிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டி ஏற்பட்டதால் மாநகர சபை இதற்கென நிதி ஒதுக்கீடு செய்வதில் சிரமங்களை எதிர் நோக்கியதை தொடர்ந்து இப்பணத்தை வாகனங்களிடம் அறவிடப்படும் வரியைக் கொண்டே நிவர்த்தி செய்வதென தீர்மானிக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சாவகச்சேரி நகர விருத்திக்கு 300 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வீதி புனரமைப்புக்கெனவும் மின்சார வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நகரசபைக் கட்டிடங்களை அமைக்கவும் என சாவகச்சேரி நகரசபைக்கு 300 லட்சம்ரூபா நிதி ஒதுக்கப்பட்டது,

இந்நிதி ஒதுக்கீட்டில் ஏழு லட்சம் ரூபா மட்டும் தற்போது எமக்குக் கிடைத்துள்ளது. இதனை வைத்துக் கொண்டு வீதிகளை புனரமைக்கும் வேலையை தொடங்கி உள்ளோம். ஏனைய ஒதுக்கப்பட்ட நிதி வந்தடைந்ததும் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்டபகுதியை அபிவிருத்தி செய்ய ஆவன செய்யப்படும் என சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. நவரட்ணராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள 89 வீதிகளையும் திருத்துவதற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# குட்டிப்புலம் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

(காங்கேசன்துறை)

வசாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது என பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர் திரு. ச. கதிரவேலு தெரிவித்துள்ளார்.

இங்கு கல்விபயிலும் ஏழை மாணவர்கள் இப்பாடசாலையையே நம்பியிருப்பதாகவும் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பின்தங்கிய பிரதேச பாடசாலையான இதற்கு நியமனம் பெற்ற பல ஆசிரியர்களின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# நிந்தவூர் தபாற்கந்தோர் கட்டடம் பழுதடைகிறது

(நிந்தவூர்)

முதலாம் தர தபாலகமாகவுள்ள நிந்தவூர் பிரதம தபால் நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் ஒன்று இல்லாத குறை நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

தற்பொழுது தனியார் ஒருவருக்குச் சொந்தமான பழைய கட்டடம் ஒன்றில் இத்தபாலகம் இயங்குவதால் இங்கு கடமை புரியும் உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் உட்பட பொது மக்களும் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்,

இக் கட்டடத்தின் கூரை ஓடை, உடைசல்களுடன் காணப்படுவதால் மழைகாலங்களில் ஒழுக்கு ஏற்பட்டு தபால் அதிபர்கள், தபால் சேவகர்களுக்குப் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுவருகின்றன.

இது குறித்து இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தபால் அமைச்சர்க்கும் அறிவிக்கப்பட்டும் இது

(6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். இலங்கை வங்கி கிளையில் 19 ஆம் திகதி நிவாரணம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையில் 19 ஆம் திகதி மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது அதன் கிராமசேவையாளர் பகுதிகளின் விபரம் வருமாறு

சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலை நவாலி ஆனைக்கோட்டை, உயரப்புலம், சங்கானைவடக்கு, சில்லாலை, மாசியப்பிட்டி நாலாயிரம் ரூபா உற்பத்தித்திறன் நிவாரணம் வழங்கப்படும் கிராமசேவையாளர் பகுதிகள் வருமாறு பண்டத்தரிப்பு, மாதகல், சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலை.

## பொதுக் கூட்டம்

(விசேட நிருபர்)

வடஇலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் முக்கிய பொதுக்கூட்டம் இன்று காலை 8 மணிக்கு யாழ் மனோகராத் திரைப்படமாளிகையில் நடைபெற இருக்கிறது.

புதிய நிர்வாகம் அமைத்தல் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி முதலிய விடயங்கள் இன்றைய பொதுக்கூட்டத்தில் முக்கிய இடம் பெறும்

கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான உருக்குத் தளபாடங்கள் வழங்குதல்

யாழ். பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான கீழ்க்காணப்படும் உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள், உருக்குத் தளபாட உற்பத்தியாளர்கள் விநியோகஸ்தர்களிடம் இருந்து 4-6-90 ஆம் திகதி காலை 10.00 மணி வரை யாழ் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. இத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கமையத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் (இணைப்பிரதிகள்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது கை மேல் மூலையில் ''பாடசாலைத் தளபாடங்கட்கான கேள்விகள்'' என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள், விபரக்கூற்றுக்கள் ஆகியவைகளை, மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ. 50/- காசாகவும், மீளளிக்கப்படத்தக்க வைப்புப் பணமாக ரூ. 250/-ஐ யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் யாழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக் கட்டளையாகவும் 25-5-90 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினைச் (பொது 172) சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

04. தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம்:-

(அ) மாணவர் உருக்குக் கதிரைகள்

(ஆ) மாணவர் உருக்கு மேசைகள்

(இ) பாலர் உருக்குக் கதிரைகள்

(ஈ) பாலர் உருக்கு மேசைகள்

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

B/ 958


# வெளிவாரிப் பரீட்சையில் பேராதனையில் குளறுபடி

(மட்டக்களப்பு)

அண்மையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கான பரீட்சையில் பல தமிழ்ப் பரீட்சார்த்திகள் குளறுபடிகள் செய்துள்ளார்கள்.

மட்டக்களப்பு, கல்முனைப் பகுதியிலிருந்து பரீட்சை எழுதச் சென்றவர்கள் தான் பரீட்சையைப் பார்த்து எழுதிக் குளறுபடி செய்தார்கள் எனத் தகவல்கள் தெரிவித்தன.

பொதுக்கலை தராதரப்பத்திரப் பரீட்சை, கலைமாணி வெளிநிலை இறுதிப் பரீட்சை ஆகியவற்றில் இக்குளறுபடிகள் ஏற்பட்டுள்ளது.

பொதுக்கலை தராதரப்பத்திரப் பரீட்சை (G. A. Q) வில் இறுதியாகநடைபெற்ற தமிழ் பாடத்தில் தோற்றிய பரீட்சார்த்திகளில் 32 பேர் பார்த்தெழுதி மேற்பார்வையாளர்களிடம் அகப்பட்டுள்ளனர். இவர்களின் சுட்டிலக்கங்கள் குறித்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவர்களில் அரச ஊழியர்களும் அடங்குவர். ஓரிருவர் பெண்கள் என்றும் கூறப்படுகிறது. (37)

# அரசாங்க ஆஸ்பத்திரிகள் பற்றிய மதிப்பீடுகள்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகள், மற்றும் மருத்துவ நிலையங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்று சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவே இந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுக்கு என்ன என்ன தேவைப்படுகின்றன என்ற விபரங்களும் அமைச்சினால் சேகரிக்கப்படுகின்றன.

முக்கியமாக கிராமங்களில் உள்ள சுகாதார நிலையங்களின் உடனடித்தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையங்கள் பலவற்றுக்கு அம்புலன்ஸ் வழங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# யானைகள் அட்டகாசத்தால் விவசாயிகள் இடம் பெயர்வு

(வந்தாறுமூலை)

ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வந்தாறுமூலை, சிற்றாண்டி, ஈரளக்குளம் ஆகிய கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பலர் யானைகளின் அடாவடித் தனத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில விவசாயிகள் வயல் பிரதேசத்திலே பல ஆண்டு காலமாக சீவித்து வந்தனர். இவர்களும் தமது பல சொத்துக்களையும் இழந்து வெளியேறி வந்தாறுமூலை சிற்றாண்டி போன்ற ஊர்களில் வந்திருக்கின்றனர்.

ஆனால் இதுவரையும் எவருக்கும் எந்தவிதமான நட்டஈடுகளோ நிவாரணமோ வழங்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் இவர்களது நிலையை கவனத்தில் எடுத்து நிவாரணம் வழங்க வேண்டும் என இம் மக்கள் கேட்கின்றனர்

யானைகளின் அட்டகாசம் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் அவற்றை விரட்ட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் யானைகள் இங்கு தினமும் வருவது அதிகரித்துள்ளது. (29)

## விசர் நோய் தடுப்புவேலைகள்

(விசேடநிருபர்)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசிபோடும்வேலைகளை பளைப் பகுதி பொதுச்சுகாதாரப்பரிசோதகர் திரு. ஆர். எல் சேவியரும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் திரு. கே. காசிப்பிள்ளையும் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

இவ் வேலைத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்புக் கொடுக்குமாறு பளைஉதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி அப்பகுதி கிராமசேவையாளர்களையும் பொது மக்களையும் கேட்டுள்ளார்.

இன்று 16 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக இவ்வேலைகள் பூர்த்தியாகு மென்றும் பொதுமக்களின் ஆதரவுபெருமளவில் கிடைத்துள்ளதாகவும் பொதுச்சுகாதாரப்பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியர் தெரிவித்தார். (21)

## புதிய சித்திரத் தேர்

(சித்தன்கேணி)

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை காலை நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை இரதோற்சவமும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (23)

## நலன் புரிச் சங்கம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய நலன் புரிச் சங்கக் கூட்டம் வித்தியாலய உப அதிபர் திருமதி. ப. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

தலைவர்:- திருமதி. ரஞ்சினி - ஆனந்தகுமாரசுவாமி செயலாளர்:- திரு. ரீ. எஸ். பாலசுந்தரம், பொருளாளர்;- திரு. த. ஜெயாதி, ஐவரடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (24)


யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2–30. 4-00, 6.30 & 9.30
BRUCE LEE IN RUCELEE THELEGEND
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
நிழல்கள் ரவி. நம்பியார். சத்தியராஜ் நடித்த
விலங்கு
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
(புதிய பிரதி)
B 878

**லிடோ (யாழ்)**
தினசரி 4–00, 6-45, 9–45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதினிலே
(B/860)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10 00, 2·00, 4 45, 7·00, 9·45
EDDIE MURPHY IN BEVERLY HILLS COP
( Color - Scope )

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-4 5
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4 00, 6 30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில் 10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)


# மாகாண சபைகளுக்கு புத்துயிர் அளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் மாகாண சபை ஆகக்கூடிய முறையில் சேவையாற்றக் கூடிய முறையில் மாகாணசபைகளுக்கு புத்துயிர் அளிக்கப்படும் என பொது நிர்வாக மாகாண சபையின் உள்நாட்டு அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதேசசபைகளின்மாவட்ட தேசிய நடவடிக்கைகளை ஒன்றிணைக்கவும் அமைச்சு திட்டம் ஒன்று தயாரித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

இங்கு இடம்பெற்ற மாகாணசபைகள்பற்றிய கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்·

மாகாண சபைகள் முறை இவ்வாண்டில் மிக வெற்றிகரமானதாத மாற்றப்படும் என மாகாணசபைகள் ராஜாங்க அமைச்சர் ஜோண் அமரதுங்கா தெரிவித்தார்.


உங்கள் திருப்திகரமான வேலைகளுக்கு.... அனுபவமுள்ள தொழில் நுட்ப வல்லுனர்களின் சேவை...

எங்கள் ஸ்தாபனத்தில்

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப்பணிப்பாளர்
கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.

B/ 958

சில விவசாயிகள் வயல் பிரதேசத்திலே பல ஆண்டு காலமாக சீவித்து வந்தனர். இவர்களும் தமது பல சொத்துக்களையும் இழந்து வெளியேறி வந்தாறுமூலை சிற்றாண்டி போன்ற ஊர்களில்

இம் மக்கள் கேட்கின்றனர்

யானைகளின் அட்டகாசம் குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் அவற்றை விரட்ட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் யானைகள் இங்கு தினமும் வருவது அதிகரித்துள்ளது. (29)

நடைபெற்றது.

தலைவர்:- திருமதி. றஞ்சினி - ஆனந்தகுமாரசுவாமி செயலாளர்:- திரு. ரீ. எஸ். பாலசுந்தரம், பொருளாளர்;- திரு. த. ஜெயாதி, ஐவரடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (24)

மாகாணசபைகளுக்கு புத்துயிர் அளிக்கப்படும் என பொது நிர்வாக மாகாண சபையின் உள்நாட்டு அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதேசசபைகளின்மாவட்ட தேசிய நடவடிக்கைகளை ஒன்

ணசபைகள்பற்றிய கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

மாகாண சபைகள் முறை இவ்வாண்டில் மிக வெற்றிகரமானதாத மாற்றப்படும் என மாகாணசபைகள் ராஜாங்க அமைச்சர் ஜோண் அமரதுங்கா தெரிவித்தார்.


**உங்கள் திருப்திகரமான வேலைகளுக்கு.... அனுபவமுள்ள தொழில் நுட்ப வல்லுனர்களின் சேவை....**

## எங்கள் ஸ்தாபனத்தில்

* டிராக்டர் என்ஜின் வேலைகள் மற்றும் * டீசல் என்ஜின் வேலைகள்
* டிராக்டர் பெட்டி வேலைகள்
* டிராக்டர் கலப்பை வேலைகள்
* கை(H)டோலிக் (டிராக்டர்) வேலைகள்
* சிறந்த ஒட்டு வேலைகள்

அத்துடன் * லேத் வேலைகள் அனைத்தும்...
* எலெக்ரிக் வெல்டிங் வேலைகள்...

**எங்கள் தரமே! தராதரம்!!**

வேலைகள் அனைத்தும் சிறந்த அனுபவசாலிகளால் கண்காணிக்கப்படுகின்றன.


* உங்கள் வாகனங்களை தெளிவாக, விரைவாக, உறுதியாக செயற் திறனுடன் எம்மிடம் திருத்துங்கள்! உடன் தொடர்பு கொள்ளுங்கள்!!

# இந்திரா என்ஜினியேர்ஸ்

விற்பனையாளர்கள்
ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (டிராக்டர்) கூட்டுததாபனம்,

649, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்,

**யாழ்ப்பாணம்.**



B-933

# பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க தளங்களின் எதிர்காலம்

## ஒருபுறம் பேச்சுவார்த்தை; மறுபுறம் ஆர்ப்பாட்டங்கள், கண்ணீர்ப்புகை!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத் தளங்களின் எதிர்காலம் பற்றிய பேச்சுவார்த்தையை பிலிப்பைன்ஸில் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவிற்கு வெளியே உள்ள மிகப்பெரிய அமெரிக்க இராணுவத் தளம் இது வாகும். இந்த தளத்தின் ஒப்பந்த காலம் அடுத்த ஆண்டு முடிவடைகிறது.

பேச்சுவார்த்தை நடைபெறும் அதேவேளை தளங்கள் பிலிப்பைன்ஸில் இருப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த மக்கள் மீது பொலிசார் கண்ணீர்ப் பிரயோகம் செய்தனர். இதனால் மணிலாவில் கலவரங்கள் மூளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அமெரிக்கத் தளங்களினால் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்குக் கணிசமான வருவாய் கிடைத்தபோதிலும் இந்தத் தளங்களை அகற்ற வேண்டுமென்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திருமதி அக்கினோ நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறார்.

ஆரம்பத்தில் ஜனாதிபதி அக்கினோவுக்கு ஆதரவு இருந்தபோதிலும், அமெரிக்கா சார்பான விடயத்தில் அவருக்கு எதிர்ப்பே இருக்கிறது.

அமெரிக்கக் குழுவின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்த வந்திருக்கும் பாதுகாப்பு அதிகாரி ரிச்சட் ஆர்மிரெக், அமெரிக்கா பிலிப்பைன்ஸுடன் கேந்திர பாதுகாப்பு ஒன்றைச் செய்ய விரும்புவதாகக் கூறினார்.

ஆயினும் பிலிப்பைன்ஸ் விரும்பினால் தளங்களை மூடிவிட அமெரிக்கா சம்மதிக்கும் என்றும் அவர் கூறினார்.

## சுதந்திரப்பிரகடனம் செய்த குடியரசுகள் பேச்சுக்கு சம்மதம்

### கொர்ப்பச்சேவ் இன்னும் பதிலில்லை

(மொஸ்கோ)

சோவியத்தின் குடியரசுகளான லித்வேனியா, லட்வியா, எஸ்தோனியா ஜனாதிபதி கொர்பச்சேவுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளன.

தமது குடியரசுகளின் சுதந்திரம் நிலை நிறுத்தப்பட வேண்டும். இதற்குத் துரிதமான பேச்சுவார்த்தைகள் அவசியமென இந்த அரசுகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எஸ்தோனியாவின் தலைநகரான டாலினில் இம்மூன்று நாடுகளின் உச்சிமகாநாடு நடைபெற்றது. இந்த உச்சி மகாநாட்டின் பின்னர் சோவியத் ஜனாதிபதிக்கு அவசரத் தந்தி ஒன்று அனுப்பப்பட்டது. அந்தத் தந்தியிலே மேற்படி தமது விருப்பத்தினை தெரிவித்திருந்தனர்.

இவ் விருப்பத்திற்கு ஜனாதிபதி கொர்பச்சேவிடம் இருந்து உடனடி பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரேசில் ஜனாதிபதியை தளபதி அவமதித்தார்

(பிரேசீலா)

பிரேசில் ஜனாதிபதி பெர்னான்டோ டி மெலா தனக்குத் தானே தலையில் சுட்டுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதற்காக தளபதி நியூட்டன் குறூசைக் கடந்த வெள்ளியிலிருந்து பத்து நாட்கள் தடுப்புக் காவலில் வைத்துள்ளார்கள்.

1985 இல் முடிவடைந்த இராணுவ ஆட்சியில் சிரேஷ்ட புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றிய நியூட்டன் குறூசைத் தடுப்புக் காவலில் வைக்கும்படியான உத்தரவை இராணுவ அமைச்சர் கார்லோஸ் பிறப்பித்தார்.

ஓ எஸ்ராடோ டி சா பூளோ என்ற பத்திரிகையில் வெள்ளியன்று வெளிவந்த பேட்டியில் நியூட்டன் குறூஸ் ஜனாதிபதியை வன்மையாகக் கண்டித்ததைத் தொடர்ந்து, அவருக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று இராணுவ அமைச்சர் கேட்டிருந்தார் என்று அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணவீக்கத்தில் மூழ்கியிருக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒரு சூட்டில் பண வீக்கத்தைக் கொல்ல முடியும் என்று அடிக்கடி சார்லோஸ் பேசி வருவது ஒரு உவமை அணியாகப் பேசப்படுவதுண்டு.

''ஒரு சூட்டைவைத்திடும் அரசியல்வாதி அதைத் தனது தலைக்குப் பாவிக்க வேண்டும்'' என்று குறூஸ்பத்திரிகைகளில் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி யோஸ் சாஸியின் ஆட்சியில் இராணுவ அமைச்சரை நிந்தித்த குற்றத்துக்காக குறூஸ் எட்டு நாட்கள் தடுப்புக்

## ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஓர் எதிர்க் கட்சி

(லண்டன்)

சோவியத் யூனியனைச் சேர்ந்த உலக முதல்தர சதுரங்க விளையாட்டுக்காரரான கெறி கஸ்பிறோல் மே 27ஆம் திகதி புதிதாக எதிர்க்கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்: சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவில் தான் நம்பிக்கையிழந்திருப்பதால் எதிர்க்கட்சி ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

லண்டன் ஒப்சோவர் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், தான் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகியுள்ளதாகவும், தற்சமயம் மஸ்கோவில் செயற்படும் பல்வேறு அரசியல் குழுக்களை ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும்,

சோவியத் யூனியனில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் கொர்பச்சேவிடம் இல்லை என்று 22 வயதுடைய உலகின் முதல்தர சதுரங்க ஆட்டக்காரரான கஸ்பிறோ தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொர்பச்சேவ் ஜனநாயக சக்திகளுடன் இணைந்துகொள்ளப் போவதில்லை என்றும், அவர் மாற்றங்களை விரும்பாத ஒரு கட்சியமைப்பைச் சேர்ந்துள்ளதால், அவர் அந்த வழியையே பின்பற்றுவார் என்றார்.

பிரான்சில் லண்டன் ஒப்சோவர் ஆசிரியர் டொனால்ட் ரெறல் பேட்டுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பது;

புதியகட்சிதாவ கம்யூனிஸ்ட் எதிர்க் குழுக்களையும், சோவியத் பாராளுமன்ற உறுப்பினர் சிலரையும் ஒன்றிணைத்து ஒரு தேர்தல் சக்தியாக உருவாக்கி, சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறிச் செல்வதோடு சமூக மாற்றங்களையும் ஏற்படுத்

## சோவியத்தின் அடுத்த பிரதமர்

(நியூயோர்க்)

சோவியத் யூனியனின் வெளியுறவு அமைச்சர் எட்வேட் ஷெவந்நாற்சே சோவியத்தின் அடுத்த பிரதமராக பதவியேற்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி அமெரிக்காவில்

# தமிழ்மொழியில் போதிய அறிவு இன்றி இன்று மாணவர் இருப்பது கவலை

(பருத்தித்துறை)

''தனிப்பெருஞ் சிறப்புப் பொருந்திய தமிழ்மொழியை வளர்த்து மெருகூட்டி தமிழ் மணத்தை உலகெலாம் கமழச் செய்யவேண்டியது தமிழினத்தின் தலையாய கடமையாகும். பாடசாலைகளில் தமிழை வளர்த்து மெருகூட்டக் கூடிய வகையில் தமிழ்த்தின விழாக்கள் நடாத்தப்பட வேண்டும். இதனால் எதிர்காலச் சந்ததியினரான இன்றைய மாணவர்கள் தமிழில் பாண்டித்தியம் பெற வழிவகுக்கப்படும்.''

மேற்கண்டவாறு, பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புலோலி கொத்தணி தமிழ்த்தின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சின் இணைச் செயலாளரும், கல்வியமைச்சின் தமிழ்மொழி அமுலாக்கல் கல்விப் பணிப்பாளருமாகிய திரு வெ. சபாநாயகம் குறிப்பிட்டார்.

விழாவிற்கு புலோலி கொத்தணி அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. சபாநாயகம் குறிப்பிட்டதாவது,

உலகத்திலே உள்ள பல்வேறு மொழிகளிலும் தமிழ் மொழிக்குத் தனிப்பெருஞ் சிறப்புண்டு. இக்கன்னித் தமிழின் மகத்துவத்தை, தனித்துவத்தை உலகெங்கும் பரப்பும்போது தமிழ் மேலும் வளர்ச்சியடையும். தமிழ் அறிஞர்கள், பெரியார்கள் காலத்திற்குக் காலம் தோன்றி தமிழ்ப் பணியாற்றி தமிழை வளர்ப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த அமரர் பேராசிரியர் வித்தியானந்தன் தமிழை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டுப் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழ்ப்பணியை தமிழ் மக்கள் மறந்துவிட மாட்டார்கள். அவரின் தமிழ் பணியை ஞாபகமூட்டும் நோக்கமாகவே அமரர்வித்தியானந்தன் மறைந்த மே 8ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் தமிழ்த் தினவிழா நடாத்தப்படவேண்டும் எனப் பணிக்கப்பட்டது.

இன்றைய மாணவர்கள் தமிழில் போதிய அறிவு பெறாமல் இருப்பது மிக கவலைக்குரியதாகும். பாடசாலைகளில் தமிழ்த்தின விழாக்களை நடாத்தி விட்டால் மட்டும் போதாது தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழை வளர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகமுக்கியமாகும். மாணவர்கள் மத்தியில் தமிழை வளர்த்து தமிழிற்கு மெருகூட்டுவதற்கு ஆசிரியர்கள், அதிபர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டே தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. பாடசாலைகள் அனைத்திலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கிவிட்டது. வெகுவிரைவில் பாடசாலைகளில் எழுத்து சீர் திருத்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். தமிழ் மக்கள் தமிழை நன்கு கற்று சிறப்பாகத் தேர்ச்சியடைந்து தமிழில் பாண்டித்தியம் பெற வேண்டும் அப்போதுதான் எதிர்காலத்தில் உலகெங்கும் தமிழ் மணங்கமழும்.

வடமராட்சி கோட்டக்கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

மாணவர்கள் மத்தியில் தமிழின் தரத்தை உயர்த்துவதற்கு பாடசாலைகளில் தமிழ் தின விழாக்கள் நடாத்தப்பட வேண்டியது முக்கியமாகும். தமிழ்தின விழாக்கள் நடாத்தப்படுவதனால் மாணவர்களின் தமிழ் அறிவு மேம்படுத்தப்படும்... தமிழை வளர்ப்பதற்கு அரும் பணியாற்றிய தமிழ் பெரியார்களையும் அவர்களது தமிழ் பணிகளையும் நாம் மறந்துவிடக் கூடாது என்றார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (25)

## நினைவு விழா

(கொழும்புத்துறை)

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நினைவு விழா எதிர்வரும் 20ஆம் திகதி காலை தொண்டமனாறு செல்வச் சந்நிதி சந்நிதியான் ஆச்ரமத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாசக சுவாமிகள் தொண்டர் சபையினரும் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகளும் இணைந்து நடாத்தும் இந் நினைவு விழா இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு.செ.சிவஞானம் தலைமையில் நடைபெறும். (24)

## தலைவருக்கு மகஜர்

(கொழும்புத்துறை)

பாதிக்கப்பட்ட அரச கூட்டுஸ்தாபன ஊழியர்கட்கு வழங்கப்படும் ஆறு மாதத்திற்கான 50 வீத சம்பள நிவாரணக் கொடுப்பனவு வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கட்கும் வழங்குமாறு கோரும் மகஜரை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு.எஸ். கனகரத்தினத்திடம் ஊழியர்கள் சமர்ப்புத்துள்ளனர்.

இச்சம்பள நிவாரணக் கொடுப்பனவை போக்குவரத்து அமைச்சு மூலம் பெற்

## மீனவர் பிரச்சினை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதிமீனவர்கள் எதிர் நோக்கும்பிரச்சினைகளை ஓர் அமைப்பு மூலம் தீர்வு காண்பதற்கும் தீவுப்பகுதியிலுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதற்காகவும் தீவக கடற் தொழிலாளர் ஒன்றியம் அமைப்பு அவசியமாக இருக்கிறது என்று தீவுப்பகுதி அரசியல் பெறுப்பாளர் திரு காஸ்ரோ தெரிவித்தார்.

## சிறுவர் பூங்கா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தியில் அமைக்கப்படவுள்ள சிறுவர் பூங்காவுக்கான தொடக்க வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

[illegible] ஒழுங்குகளைத் தீ[illegible]படுதலைப்புலிகள் ம[illegible]கள் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.

இதுவே நெடுந்தீவின் முத

## தீவுப்பகுதி மினிவான்சேவை

(விசேடநிருபர்)

ஊர்காவற்றுறை பாதையில் மினிவான் சேவை நடத்துபவர்கள் பிரயாணிகளின் சௌகரியத்தைக் கவனியாமல் பணத்தைச் சுரண்டுவதிலேயே கண்ணாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ரங்க விளையாட்டுக்காரரான செறி கஸ்பிறோல் மே 27இல் திகதி புதிதாக எதிர்க்கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்: சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவில் தான் நம்பிக்கையிழந்திருப்பதால் எதிர்க்கட்சி ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

லண்டன் ஒப்சோவர் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில், தான் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு விலகியுள்ளதாகவும், தற்சமயம் மஸ்கோவில் செயற்படும் பல்வேறு அரசியல் குழுக்களை ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், வெகு விரைவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான ஒரு கட்சியை அமைக்கப் போவதாகவும் அறிவித்தார்.

கஸ்பிறோல் அவரது பிறப்பிடமான அசர்பைஜான் குடியரசில் இளம்கம்யூனிஸ்ட் கழகத்தில் மத்திய குழு உறுப்பினராய்ச் செயலாற்றினார்.

இல்லை என்று 22 வயதுடைய உலகின் முதல்தர சதுரங்க ஆட்டக்காரரான கஸ்பிறோ தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொர்பச்

## சோவியத்தின் அடுத்த பிரதமர்

(நியூயோர்க்)

சோவியத் யூனியனின் வெளியுறவு அமைச்சர் எட்வேட் ஷெவர்நாற்சே சோவியத்தின் அடுத்த பிரதமராக பதவியேற்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி அமெரிக்காவில் வெளிவரும் நியூஸ் வீக் சஞ்சிகை கடந்த ஞாயிறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரதமர் பதவி வகிக்கும் நிக்கலாய் ரிஸ்க்காவ் விரைவில் ஜனாதிபதி கொர்பச்சேவினால் பதவி நீக்கப்படக் கூடும் எனவும் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

றங்களை விரும்பாத ஒரு கட்சியமைப்பைச் சேர்ந்துள்ளதால், அவர் அந்த வழியையே பின்பற்றுவார் என்றார்.

பிரான்சில் லண்டன் ஒப்சோவர் ஆசிரியர் டொனால்ட் ரெறல் பேட்டுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பது;

புதியகட்சிதாவ கம்யூனிஸ்ட் எதிர்க் குழுக்களையும், சோவியத் பாராளுமன்ற உறுப்பினர் சிலரையும் ஒன்றிணைத்து ஒரு தேர்தல் சக்தியாக உருவாக்கி, சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறிச் செல்வதோடு சமூக மாற்றங்களையும் ஏற்படுத்தும்.

வெளியில் நிற்கும் கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சக்திகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு இதுதான் தருணமென்றும், கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சக்திகளை ஆக்க வழியில் திரும்ப வேண்டும் என்றார்.

கும் லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒரு சூட்டில் பண வீக்கத்தைக் கொல்ல முடியும் என்று அடிக்கடி சார்லோஸ் பேசி வருவது ஒரு உவமை அணியாகப் பேசப்படுவதுண்டு.

''ஒரு சூட்டைவைத்திடும் அரசியல்வாதி அதைத் தனது தலைக்குப் பாவிக்க வேண்டும்'' என்று குறுஸ்பத்திரிகைகளில் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி யோஸ் சார்னியின் ஆட்சியில் இராணுவ அமைச்சராக நிந்தித்த குற்றத்துக்காக குறுஸ் எட்டு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

## இடமாற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கமநல சேவைகள் காரியாலயத்தில் பிரதமலிகிதராக கடமையாற்றிய திரு. வேலுப்பிள்ளை என்பவர் வடக்குக் கிழக்கு மாகாண சபை கமநல சேவை திணைக்களக் கணக்காளராக பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார்.

இவருடைய இடத்துக்கு திரு எம்.முத்துக்கிருஸ்ணன் பிரதமலிகிதராக பதவி உயர்வு பெற்று நியமிக்கப்பட்டுள்ளார்- (58)

## மகஜர்

(கொழும்புத்துறை)

பாதிக்கப்பட்ட அரச கூட்டுஸ்தாபன ஊழியர்கட்கு வழங்கப்படும் ஆறு மாதத்திற்கான 50 வீத சம்பள நிவாரணக் கொடுப்பனவு வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கட்கும் வழங்குமாறு கோரும் மகஜரை வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு.எஸ். கனகரத்தினத்திடம் ஊழியர்கள் சமர்ப்புத்துள்ளனர்.

இச்சம்பள நிவாரணக் கொடுப்பனவை போக்குவரத்து அமைச்சு மூலம் பெற்றுத் தருமாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. (24)

## கால்நடை வளர்ப்போர் சங்கம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு கால்நடை வளர்ப்போர்கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். போஷகர்:- திரு.செ.கந்தசாமி, தலைவர்;-திரு. சி. சி. வரதராசா, உபதலைவர்;- திருமதி. செ, இராஜேஸ்வரி. செயலாளர்;- திரு மு.குணரத்தினம், உப செயலாளர்;-செல்வி.த. றூபி உறுப்பினர்;- செல்வி க.பிரேமலதா. (24)

ஒன்றியம் அமைப்பு அவசியமாக இருக்கிறது என்று தீவுப் பகுதி அரசியல் பெறுப்பாளர் திரு காஸ்ரோ தெரிவித்தார்.

## சிறுவர் பூங்கா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தியில் அமைக்கப்படவுள்ள சிறுவர் பூங்காவுக்கான தொடக்க வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இ[illegible] ஒழுங்குகளைத் தீர்த்து [illegible] விடுதலைப்புலிகள் ம[illegible]கள் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.

இதுவே நெடுந்தீவின் முதலாவது சிறுவர் பூங்காவாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (62)

## பாடசாலையில் அரங்கு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் புதிதாக உள்ளக அரங்கு ஒன்றினைஅமைத்துள்ளனர்.

கலை நிகழ்ச்சிகளைச் சிரமமின்றி அரங்கேற்ற இவ் வரங்கில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இதே வேளை பழுதடைந்த திறந்த வெளியரங்கின்திருத்த வேலைகளும் நடைபெறு கின்றன. (62)

தற்கு அரும் பணியாற்றிய தமிழ் பெரியார்களையும் அவர்களது தமிழ் பணிகளையும் நாம் மறந்துவிடக் கூடாது என்றார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (25)

## தீவுப்பகுதி மினிவான்சேவை

(விசேடநிருபர்)

ஊர்காவற்றுறை பாதையில் மினிவான் சேவை நடத்துபவர்கள் பிரயாணிகளின் சௌகரியத்தைக் கவனியாமல் பணத்தைச் சுரண்டுவதிலேயே கண்ணாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து கரம்பன்வேளாங்கண்ணி ஆலயத்திற்கு சென்றவர்களிடம் கட்டணத்தைமுழுமையாக அறவிட்ட மினிவான் சேவையினர் ஊர்காவற்றுறையில்அவர்களை இறக்கிவிட்டு வான்பழுதடைந்துவிட்டதாக தெரிவித்தனராம்.

அங்கிருந்து திரும்பவும் வேறொரு வாகனத்தில் கட்டணம் செலுத்தியே வேளாங்கண்ணி ஆலயத்திற்கு போக நேர்ந்ததாகப் பிரயாணி ஒருவர்தெரிவித்தார். (21)

## தவறவிட்ட பணம் அ.அட்டை

(கரவெட்டி)

28 ஶ்ரீ 1155 என்ற இலக்கத்தைக் கொண்ட பருத்தித்துறை- யாழ்ப்பாண மினிபஸ்சில் பயணம் செய்த நபரொருவர் தனது அடையாள அட்டையையும் அதனுடன் பணத்தையும் தவறவிட்டுள்ளார்.

அப்பணத்தையும் அடையாள அட்டையையும் தகுந்த ஆதாரம் காட்டி மேற்படி இலக்க பஸ்சில் பெற்றுக் கொள்ளும்படி பஸ் நடாத்துனர் நமது நிருபர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார் (18)

# நிலத்திலிருந்து கல்விபயிலும் பாடசாலை 'மாணவர்கள்

(தம்பிலுவில்)

தம்பிலுவில் மணல்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விபயிலும் நூற்றி எண்பத்தாறு மாணவர்களும் நிலத்திலிருந்தே கல்வி பயிலுகின்றனர்.

இங்கு போதிய தளபாடங்கள் இல்லை என அதிபரும், பெற்றோர், பழையமாணவர்கள் கல்விப்பகுதிக்கு பலதடவைகள் அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி ஒழுங்கான முறையில்மலசலகூடம்,கிணறு என்பனவும் அமைக்கப்படாததால், மாணவர்களும் ஆசிரியர்களும் இதனால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

அத்துடன் அதிபருக்கான அலுவலகமோ, பாடசாலை ஆவணங்களை பாதுகாப்பதற்குரிய அலுமாரி வசதிகளோ இங்கு இல்லை.

புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளும் போதாவது இதனைக் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

## திருத்த வேலை நடைபெறுமா?

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு வதிரி.பீட பிள்ளையார் கோவிலின் தேவஸ்தான வருடாந்த திருவிழா இம்மாதம் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக் காலத்தின் போது சுவாமி தேரில் வரும் விபுலானந்தர் வீதி மிகவும் சேதமடைந்து இருக்கிறது.

மற்றும் சுற்றுப் புற வீதியில் போதியளவு மின்சார விளக்குகளும் இல்லை.

இவற்றை யாழ் மாநகர சபை உடனடியாக கவனித்து வீதியையும் புனரமைப்பு செய்து வெளிவீதிக்கு மின் விளக்குகள் போடுவார்கள் என இங்குள்ள சைவப் பெரியார்கள் எதிர்பார்க்கின்றனர். (43)

## பாதிப்பு

(அம்பாறை)

பொத்துவில், திருக்கோவில், நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ஒரேயொரு தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் மாத்திரமே உள்ளார்.

எனவே, மேற்படி காலியான இடங்களுக்கு உத்தியோகத்தர்களை நிரப்பி தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களின் கஷ்டங்களைப்போக்க வடக்கு கிழக்கு மாகாண அரசின் விவசாய காணி அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆயிரக்கணக்கான தெங்கு பயிர்ச் செய்கையாளர்கள் குரல் கொடுக்கின்றனர். (48)

# ரிசேவ் பொலிஸாருக்கு அடுத்தமாதத்தில் பயிற்சி

வட - கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ரிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள், சப் இன்ஸ்பெக்டர் ஆகிய பதவிகளுக்கான நேர் முகப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி அடுத்தமாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என பொலிஸ் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இம் மாகாணங்களில் அம்பாறையில் மட்டும் தான் பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உடனடியாக பயிற்சி கல்லூரியை ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளது.

இந் நிலையில் கண்டி, வெள்ளவாயா, கட்டானை ஆகியஇடங்களிலுள்ள பயிற்சி கல்லூரிகளில்தான் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## திருப்பணிவேலை

பழமை வாய்ந்த நெடுந்தீவு மத்தி பெருக்கடி விநாயகர் ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வேலைகள் சிறப்புறப் பக்தர்கள் நிறைவாக உதவி வருகின்றனர்.ஆலய கும்பாபிஷேகம் விரைவில்நடைபெறும் எனப் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (62)

## முதற்பரிசு

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய இலக்கிய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் விரிவுரையாளர் நாகேஸ்வரனுக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

க. நாகேஸ்வரன் ''மகாகவி பாரதியார் இலக்கியங்களும் தமிழ் மொழி உணர்வுகளும்'' என்னும் பொருளில் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்திருந்தார்.

இக்கட்டுரைக்கு 500 ரூபா சன்மானமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.

## மண்வெட்டி வழங்கப்படவில்லை

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு உற்பத்தி திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான மண்வெட்டிகள் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிவாரணத்தைப் பெறுவதற்கு ஏற்கனவே இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பலர் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் இதுவரை தமக்கு மண்வெட்டிகள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (18)

## நியமனம்

(அம்பாறை)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கல்முனைப் பிரதேச தொழில் நுட்ப உத்தியோகத்தராக திரு.பி.தருமரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இப்பிரதேசத்தில் நடைபெற்று வரும் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழான வீடு அமைப்பு வேலைகளுக்கான கடன்,மானியம் வழங்கும் வேலைகளை இவர் கவனித்து வருகிறார். (48)

## இவர்களுக்கு வழங்கவில்லை

(தீவுப்பகுதி)

வேலணைப் பிரதேச சபையின் கீழ் உள்ள வேலணை,அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு,நயினாதீவு ஆகிய உப அலுவலக ஊழியர்களுக்கு கஸ்ட நிவாரணப் பணம்வழங்கப்படவில்லையென குறை கூறப்படுகிறது.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இக் கஸ்ட நிவாரணப் பணம்பல பகுதிகளுக்கும் வழங்கப் பட்டுள்ள போதிலும் தீவுப்பகுதிக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. (15)

## தென்மோடிக் கூத்து

(யாழ்ப்பாணம்)

மெலிஞ்சிமுனை கலைக் குரிசில் நாடக கலாமன்றம் அளிக்கும் புனித கிறிஸ்தோப்பர் தென்மோடி நாட்டுக் கூத்து இன்று புதன் கிழமை மாலை 7 மணியளவில் நாவாந்துறை சென் மேரிஸ் முத்தமிழ் அரங்கில் நடைபெறும்.

யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## நாய்களுக்கு தடுப்பூசி

கடந்த மாதம் புளியந்தீவு கோட்டைமுனை பகுதியில் காணப்பட்டவிசர்நாய்களுக்கு நோய் ஏற்படாவண்ணம் மட்டக்களப்பு திட்டமிடல் சுகாதாரப்பரிசோதகர் அவர்களினால்தடுப்பூசிஏற்றப்பட்டது.

அடுத்தவாரம்கல்லடிப்பகுதியிலும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது, மேற்படிநடவடிக்கைகள் மட்-றோட்டறிக்கிளப்பின் ஆதரவுடன்நடைபெற்றது. (29)

## மகளிர் முன்னணி கிளை

(தம்பிலுவில்)

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியின் தம்பிலுவில் கிளை கடந்த 5ஆம் திகதி அம்பாறைமாவட்ட பணிப்பாளர் செல்வி இரத்தினம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இம் முன்னணியின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவி திருமதி தி. விமலேஸ்வரி, செயலாளர் செல்வி த. லலிதாஞ்சலி பொருளாளர் செல்வி த. விஜயராணி.

சகல வீட்டு கூரை வேலைகளும்
சகல தளபாட வேலைகளும்
உடனுக்குடன் ஒப்பந்த
அடிப்படையிலும் ஓடர்களுக்கும்
செய்து கொள்ள

நாடுங்கள்

**நாதன்**
**தச்சு தொழிற்சாலை**
**இல.497, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(B/939)


## கலாசார கற்கை நெறி தமிழ் மொழியில் நடைபெறும்

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலாசார கற்கைநெறி விரிவுரைகள் தமிழ் மொழியிலும் நடைபெறும்.

மாணவர்கள் விரும்பினால் ஆங்கில மொழியிலும் கற்க முடியும் என்று பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் கே. சந்தானம் ''ஈழநாதத்''துக்கு தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக் கழகம் ஆங்கில மொழி பல்கலைக் கழகமாகும். ஆனால் மாணவர்கள் நலன் கருதி கலாசார கற்கை நெறி தமிழ்மொழி மூலம் நடைபெறவிருக்கிறது.

மேற்படி பீடத்தில் தற்போது அரபு இஸ்லாமிய கல்வி கவின் கலை போன்ற பகுதிகள் உள்ளன இப் பகுதிகள் தற்போது 5 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞானம் எனபுதிய பிரிவுஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், மெய்யியல் ஆகிய பாடங்கள் அடங்கும்

மொழி என்ற பகுதியில் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் கற்பிக்கப் படும்.

இப்பீட விரிவுரைகள் தமிழ் மொழியில் நடைபெறும். மாணவர்கள் விரும்பினால் ஆங்கில மொழியிலும் விரிவுரைகள் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (37)

## ஓட்டோ குடை சாய்க்கப்பட்டது சாரதி தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஞாயிறு நண்பகல் யாழ். பஸ்நிலையத்திற்கருகில் ஓட்டோவொன்று குடைசாய்க்கப்பட்டது. இதனைச்சூழ்ந்து மக்கள் நின்றபடியால் போக்குவரத்திற்கு சிறிது நேரம் இடைஞ்சல் ஏற்பட்டது. யாழ்நகரிலமைந்த கொழும்பு-பஸ் பதிவு நிலையத்தைச் சேர்ந்த ஒருவர் ஓட்டோவில் பயணம் செய்வதற்கு பேரம் பேசியதாகவும், அதற்கு ஓட்டோ சாரதி சம்மதிக்காத படியால் குறித்த நபர் கோபமடைந்து ஓட்டோச் சாரதியைப் பலமாகத் தாக்கியும், அவரது ஓட்டோவைக் குடைசாயச்செய்தும் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார். இதனால் ஓட்டோ சிறிது சேதமடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஓட்டோ செலுத்துவோர் சங்கத்தினர் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், குறித்த நபர் மதுபோதையில் இருந்ததாகவும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக ஓட்டோ உரிமையாளர் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார். (மு)

## நூலகர்களுக்கு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு பகுதி நூல் நிலைய பராமரிப்பு பயிற்சி நெறியை விருத்தி செய்வதன் நோக்கோடு பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் யாழ் பல்கலைக்கழக பதிவாளரின் ஏற்பாட்டின் பேரில் வட கிழக்கு பகுதியில் உள்ள சன சமூக நிலையங்கள், நூல்நிலையங்கள் ஆகியவற்றில் சேவையாற்றும் நூலகர்களுக்கு பயிற்சி நெறி வகுப்புக்கள் நடாத்தப்பட உள்ளன. இதற்கு முன்னோடியாக, யாழ். பல்கலைக் கழகத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் பதிவாளர் எஸ். பரமேஸ்வரனால் நடாத்தப்பட்டதுடன் எதிர் வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி இப்பயிற்சி நெறியை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

## சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் உறுதி வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு வழங்கப்படவேண்டி 10 ஆயிரத்து 500 சுவர்ணபூமி உறுதிகளில் சுமார் 4 ஆயிரம் உறுதிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. க. குணராசா ஆகியோர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளினாலேயே மேற்படி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை சுமார் 900 உறுதிகள் வழங்கப்பட்டன. ஏனைய உறுதிகள் நடமாடும் கச்சேரிகள்மூலமும், கிளிநொச்சிக் கச்சேரியிலுள்ள காணி அலுவலகம் மூலமும் வழங்கப் படவுள்ளன.

சுவர்ணபூமித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கென யாழ். கச்சேரிக்கு அனுப்பப்பட்ட உறுதிகளில் 237 உறுதிகளை இந்திய அமைதிப்படையினர் உபயோகித்து அடுப்பு மூட்டித் தேநீர் வைத்துக்குடித்தனராம். உணவுப் பண்டங்களைச் சமைப்பதற்கும் உறுதிக்கட்டுகளே விறகாகப் பாவிக்கப்பட்டதாம். (49)

## மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் நடாத்த இருந்த மறியல் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு எதிரே இம்மறியல் போராட்டம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் வவுனியா பிரிவு மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு.ராம் பேச்சு வார்த்தை மூலம் மேற்படி பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்று ஆலோசனை கூறியதை அடுத்து இப்போராட்டம் கைவிடப்பட்டது. (தி)


சாரதிப் பயிற்சிகளுக்கு...
**யாழ் குடாநாட்டின் 40 வருட நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்**
எந்தவொரு வாகனத்தையும் மிக மிக...
திறமையாக - தெளிவாக - நிதானமாக
பயிற்சி கொடுத்து அத்துடன்
கொழும்பில் சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்க ஒழுங்குகளும்,
நேரடியாகக் கூட்டிச் சென்று செய்து தருபவர்கள்...
அத்துடன்:- பெண்களுக்கும் வாகன சாரதிப் பயிற்சிகள் கொடுக்கப்படும்.
விபரங்கட்கு:
**பொன்ராஜா**
**மோட்டார் பயிற்சி சாலை**
82, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(B-938)



தமிழீழ ஆய்வு நிறுவனத்துக்கு தமிழ், ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்தாளர்கள்
**தேவை**
தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளரும், சுருக்கெழுத்தாளரும் தேவை. இலத்திரனிய (Electronic Type Writer) தட்டெழுத்தைக் கையாளக்கூடியதாக இருப்பின் விரும்பத்தக்கது. இவை மூன்றையும் செய்யக்கூடிய அனுபவமுள்ள ஒருவர் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (B-952)



உதவித் தாதியர் பயிற்சி நெறி
**TRAINING FOR NURSES AIDE**

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-
அதிபர்
Dr. V. P.



உங்கள் அபிமானத்திற்குரிய ஸ்தாபனம்!
**எங்களிடம்...**
❋ மளிகைப் பொருட்கள் ❋ நெஸ்லே பால்மாவகைகள்
❋ குளிர் பானங்கள் ❋ சாய்ப்புச் சாமான்கள்
❋ கோழித் தீனிகள் ❋ கால்நடைத் தீனிகள்
❋ எரிபொருள்
❋ தரமே... எங்கள ஆதாரம் ❋
நாடுங்கள்:

உங்கள் அபிமானத்திற்குரிய ஸ்தாபனம்!

## எங்களிடம்...

- மளிகைப் பொருட்கள்
- நெஸ்லே பால்மாவகைகள்
- குளிர் பானங்கள்
- சாப்புச் சாமான்கள்
- கோழித் தீனிகள்
- கால்நடைத் தீனிகள்
- எரிபொருள்

தரமே... எங்கள் ஆதாரம்

நாடுங்கள்:

## லக்சுமி ரேட்ஸ்

கொக்குவில்.

(B-941)


யாலய மாணவர்கள் நடாத்த இருந்த மறியல் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை வவுனியா கல்வித் திணைக்களத்திற்கு எதிரே இம் மறியல் போராட்டம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் வவுனியா பிரிவு மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு.ராம் பேச்சு வார்த்தை மூலம் மேற்படி பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்று ஆலோசனை கூறியதை அடுத்து இப்போராட்டம் கைவிடப்பட்டது. (தி)

### மின்னல் தாக்கி அதிபர் மரணம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவில் இடிமின்னல் தாக்கி வயலுக்குச் சென்று கொண்டிருந்த பாடசாலை அதிபர் திரு. ருத்திரா உயிரிழந்தார்.


1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.694)

யாழ். குடாநாட்டின் நன்மதிப்புக்கு ஒரு ஸ்தாபனம்

## N. R. M. எக்ஸ்பிறஸ்

சொகுசு பஸ்சேவை உங்கள் பயணத்தை இனிமையாக்கும்.

ரிக்கட்டுகள்: R.B. புக்கிங் சென்ரர் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அத்துடன் எமது நீண்டகால அனுபவமுள்ள தொழில் நுட்பவல்லுனர்களால்..... எல்லாவித பெற்றோல், டீசல் வாகனங்கள் யாவும் திருத்திக் கொடுக்கின்றோம்.

சகல வாகனங்களினதும்
- ரிங்கர் வேலைகள்
- பொடி வேலைகள்
- வயறிங் வேலைகள்
- வெல்டிங் வேலைகள்
- கியர் பொக்ஸ் வேலைகள்
- கை(H)டோலிக் வேலைகள்

அனைத்தையும் முழு உறுதியுடன் சலிப்பின்றி செய்து கொடுப்பவர்கள்.....

# நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ்

797, கே. கே. எஸ். வீதி, (சிவலிங்கப்புளியடி சந்தி)

யாழ்ப்பாணம்.

(B-943)

சிந்தனைக்கு

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரளவிடல்

- திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 16-05-90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05


## பழி ஓரிடம் பாவம் ஓரிடம்

வடக்கிலும் கிழக்கிலும் எந்தப்பொருள் எந்தக் கடையில் வாங்கினாலும் கொழும்பில் வாங்கும் விலையை விட மிக அதிகமாகவே இருக்கிறது. வடக்கில் சகல பொருள்களின் விலைகளும் மிகமிக அதிகமென்று குடும்பப் பெண்களும் குடும்பத் தலைவர்களும் தினமும் குறை கூறுவதைக் கேட்கலாம்.

ஏன் இந்த விலை உயர்வு என்று கேட்டால் பெரிய வர்த்தகரிலிருந்து சிறிய வர்த்தகர் வரை ''பெரிசுக்கு வரி கட்டவேணும் என்னும் பெரிசு வரி போட்டிருக்கு'' என்னும் மெல்லிய குரலில் சாட்டுச் சொல்லி விடுவது வழக்கமாகிவிட்டது.

சில வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் என்று ஒன்று தொங்கும். ஆனால் அந்தப் பட்டியலுக்கும் கடையில் விற்கும் பொருள்களின் விலைக்கும் சம்பந்தமே இராது. சில விலைப்பட்டியலில் விலையே இராது.

அமைதிப்படை என்ற இந்திய இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் ஆக்கிரமிப்புச் செய்திருந்தபோது அவர்களின் பாதுகாப்பிலிருந்தவர்களும் கொள்ளையர்களும் கொழும்பிலிருந்து வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு பொருள் களை ஏற்றி வந்த லொறிகள் சில இடையிடையே கொள்ளையடிக்கப்பட்டன.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களுக்காகக்கொள்ளை யடிக்கப்படாத பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டு இழந்தவற்றை விட அதிகமாகவே சம்பாதித்துக் கொண்டதும் உண்டு.

அரசாங்கம் பொருள்களின் விலையை அதிகரித் தாலும், அரசாங்கம் வரி விதித்தாலும் உடனடியாகவே பொருள்களின் விலை உயர்ந்துவிடும்.

ஆனால் அரசாங்கம் விலையைக் குறைத்தாலும் வரியை நீக்கினாலும் ஏறிய விலை இறங்குவதற்குப் பெரும்பாடுபடும். அது பழைய கையிருப்பு என விளக்கம் சொல்லப்படும்.

விடுதலைப் புலிகள் வரி விதித்திருப்பது உண்மை தான். அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படவில்லை.

வரி விதிக்கப்படாத பொருள்களின் விலையை அவர்கள் விதித்த வரித்தொகையையும்விட அதிகமாகப் பொருள்களை சில வர்த்தகர்கள் விற்கிறார்கள்.

அதாவது புலிகள் ஒரு பொருளுக்கு விதிக்கும் வரியைப் பாவனையாளர்களிடமிருந்து பெறுவதுடன் இந்த வரியைக் காரணம் காட்டி மேலதிகமாகவும் இலாபம் சம்பாதிக்கும் வர்த்தகர்களுமிருக்கிறார்கள்.

# முஸ்லிம் மக்கள் தமிழ்ச் சமூகத்தின் இணைபிரியாத ஓர் அங்கம்!



''தமிழீழத்தில் எமது கட்சி அமைப்பை கட்டி எழுப்பும் எமது அரசியல் அமைப்பாளர்களும் பொறுப்பாளர்களும் தமிழர் முஸ்லிம்கள் ஒற்றுமை பற்றி முக்கிய கவனம் எடுக்க வேண்டும்.

முஸ்லிம் மக்கள், தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு இணைபிரியாத அங்கம். முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்றால், தமது தாயக மண்ணைப் பாதுகாக்க வேண்டுமென்றால் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து போராட வேண்டும். தமிழ் முஸ்லிம் மக்களது ஒற்றுமையின் பாலமாகவே எமது கட்சி செயற்பட வேண்டும். எனவே தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒரே சக்தியாக ஒன்றிணைந்து எமது கட்சியின் பின்னால் அணி திரள வேண்டும். எமது கட்சியின் கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் முஸ்லிம் மக்கள் எமது கட்சியில் இணைந்து கொள்ளும் வகையில் நெறிப்படுத்தப்படவேண்டும்.

இன்றைய வரலாற்றுச் சூழ்நிலையில் எமது விடுதலை இயக்கம் ஜனநாயக அரசியல் வடிவத்தில் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்திருக்கிறது. ஜனநாயகக் கட்சியாக நாம் எமது இயக்கத்தை விரிவுபடுத்தி பரந்துபட்ட வெகுஜனங்களை எம் பின்னால் அணிதிரட்ட தீர்மானித்துள்ளோம். தமிழ், முஸ்லிம் மக்கள் எமது கட்சியில் இணைந்து கொள்வதன் மூலம், எமது விடுதலை இயக்கம் என்றுமில்லாதபடி பலம் வாய்ந்ததாக உருப்பெறும். மக்கள் வெறும் பார்வையாளர்களாக இருக்காமல், விடுதலைப் போராட்டத்தில் நேரடிப் பங்குதாரர்களாக மாறிவிடும் வாய்ப்பை நாம் அளிக்கின்றோம்.

உண்மையான ஒரு தேசிய இயக்க ரீதியில் ஒன்று கலந்து ஒரு மாபெரும் தேசிய சக்தியை கட்டி எழுப்புவதானால் தமிழ், முஸ்லிம் மக்கள் எமது கட்சியில் சேர்ந்துகொள்ள வேண்டும். எமது மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழவேண்டுமென்றால் எமது கட்சிக்கு பக்கபல மத்தியில் வேற்றுமையையும், வேறுபாட்டையும் உண்டு பண்ணி, தமிழ் பேசும் தேசிய இனத்தை பிளவுபடுத்தி பலவீனமாக்குவதற்கு பல்வேறு தீயசக்திகள் இன்று முனைந்து வருகின்றன. இந்த தீய சக்திகளின் நாசகார சதிகளுக்குள் சிக்கிவிடாத வண்ணம் தமிழ், முஸ்லிம் மக்கள் இருக்க வேண்டும்.

தமிழீழம் எனப்படும் எமது மண் தமிழ் முஸ்லிம் மக்களின் தாயக பூமியாகும். எமது தாயகப் பூமியின் பூகோள தனித்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக் காத்து பேணுவது எமது கட்சியின் அடிப்படை இலட்சியமாகும். எமது தாயகப் பூமியை அத்திவாரமாகக் கொண்டே மற்றைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் நாம் வென்றெடுக்க முடியும். எமது தாயகத்தைக் கட்டிக் காப்பதாயின் இந்தத் தாயகத்தின் மைந்தர்களாகிய தமிழர்களும், முஸ்லிம் களும் தமது வேறுபாடுகளை மறந்து தேசிய சுதந்திர இயக்கமாகிய எமது கட்சியின் பின்னால் அணிதிரள வேண்டும். இவ்வாறு திரு. மகேந்திரராசா குறிப்பிட்டார்.

**முஸ்லிம் மக்கள் பற்றிய விவகாரத் தீர்மானங்கள்**

தமிழீழத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் மத்தியில் எமது கட்சியமைப்பு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள்.

1. எமது கட்சியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் முஸ்லிம் விவகாரப் பொறுப்பாளராக நியமிக்கப்பட வேண்டும். இவர் ஒரு இஸ்லாமியராக இருத்தல் நன்று.

2. முஸ்லிம் விவகார பொறுப்பாளருடன் இணைந்து செயலாற்றும் பொருட்டு முஸ்லிம்கள் பெரும் தொகையில் வாழும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம் அரசியல் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

3. முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரசார வேலைகள் மேற்கொண்டு எமது கட்சி அமைப்பை, முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பும் பிரதான பொறுப்புகள் முஸ்லிம் விவகாரப் பொறுப்பாளரையும், கட்சியமைப்பு வேலைகள் பற்றி தலைமைச் செயற்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

4. முஸ்லிம் மக்கள் மத்தியில் எமது இயக்கத்திற்கு ஆதரவானவர்கள், எமது கொள்கைகளை ஆதரிப்பவர்கள் தமிழ், முஸ்லிம் இன ஒற்றுமையை விரும்புபவர்கள் ஆகியோரை இனங்கண்டு, கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்து, முஸ்லிம் கிராமங்களில் கட்சியின் கிராமிய அவைகளை நிறுவுவது முஸ்லிம் அரசியல்அமைப்பாளர்களின் முதற்படியான பணியாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்குழு மாநாடு இவ்வருடம் பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 1ஆம் திகதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை என்னும் இடத்தில் நடைபெற்றது,

தமிழீழத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் பற்றி, தலைமையுரையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா குறிப்பிட்டுள்ளதையும் மக்கள் மத்தியில் கட்சியமைப்பு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களை பற்றியும் மாநாட்டின் தீர்மானங்கள் பற்றியும் இங்கு வாசகர்களுக்குத் தருகிறோம்.

5. முஸ்லிம் கிராமங்கள் தோறும் அல்லது கிராமங்கள் இணைந்ததாக முஸ்லிம் இணக்க அவைகள் உருவாக்கப்படல் வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் நன்மதிப்புப் பெற்ற பெரியார்கள், மௌலவிகள் உட்பட, தொழில் ரீதியாக சகல மக்களின் பிரதிநிதித்துவம் அடங்கும் வகையில் இந்த இணக்க அவைகள் அமைதல் வேண்டும். கிராம ரீதியாக எழும் சமூகப்பிரச்சினைகளுக்கு இணக்கம் காண்பதுடன், கிரிமினல் குற்றங்கள் சம்பந்தப்பட்டமட்டில் அதன் தீர்வுகளை இணக்க அவைகள் எமது கட்சியமைப்புக்கு ஒப்படைக்கும்.

6. திருமலை. மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மாவட்டங்களில் தமிழர்-முஸ்லிம் நட்புறவுக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டும். தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைப் பேணுவோர் எமது கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் இக்கழகங்களில் அங்கத்துவம் பெறவேண்டும்.

7. முஸ்லிம் மக்களை பிரசார ரீதியாக வென்றெடுக்கும் நோக்கில் ஓர் அரசியல் மாத ஏடு ஆரம்பிக்கப்பட வேண்டும். எமது இயக்கத்திற்கு ஆதரவான முஸ்லிம் பத்திரிகையாளர், எழுத்தாளர்களைக் கொண்டு இந்தப் பத்திரிகை நடத்தப்படவேண்டும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் குரலாக இந்தப் பத்திரிகை அமையவேண்டும்.

8. தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையையும், தமிழ் - முஸ்லிம் தாயகத்தின் பாதுகாப்பையும் தமிழ்-முஸ்லிம் தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் முஸ்லிம் பகுதிகளில் அரசியல் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும். எமது கட்சியின் இலட்சியம், கொள்கைத்திட்டங்களை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் அறிஞர்கள், பேச்சாளர்கள் இக்கூட்டங்களில் பங்குகொள்ள ஒழுங்கு செய்தல் வேண்டும்.

9. முஸ்லிம் மக்களை அவமதிக்கும் அல்லது துன்புறுத்தும் எமது தோழர்கள் மீது உடனடி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முஸ்லிம் மக்களோடு அன்புடனும், மரியாதையுடனும் பழகிக் கொள்ளுமாறு எமது தோழர்கள் பணிக்கப்பட வேண்டும்.

10. முஸ்லிம் மக்களின் மார்க்கவிவகாரங்களில் எமது இயக்கமும், கட்சியும் தலையிடுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வற்புறுத்தலின் பேரில் நிதி சேர்ப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

## தமிழீழ இணக்க மன்றுக்களை உருவாக்குங்கள்

தமிழீழப் பிரதேசமெங்கும் தமிழீழ இணக்க மன்றுக்களை உருவாக்குவதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது. உங்கள் பகுதிகளில் இதுவரை

## வருடாந்த உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் பதினெட்டாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறும்.

இம் மாதம் இருபத்தாறாம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், இருபத்தேழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெற்று. மகோற்சவம் நிறைவு பெறும்.

வழமைபோல் தேர்த் திருவிழாவன்று ஆலய அன்னதான சபையினரால் அன்னதானமும் திருவிழாக் காலமாகிய பத்து நாட்களும் செல்வா இளைஞர் மன்றத்தினால் தாக சாந்தியும் வழங்கப்படும். (22)

## குறிகாட்டுவான் பஸ் சேவை

தாலும், அரசாங்கம் வரி விதித்தாலும் உடனடியாகவே பொருள்களின் விலை உயர்ந்துவிடும்.

ஆனால் அரசாங்கம் விலையைக் குறைத்தாலும் வரியை நீக்கினாலும் ஏறிய விலை இறங்குவதற்குப் பெரும்பாடுபடும். அது பழைய கையிருப்பு என விளக்கம் சொல்லப்படும்.

விடுதலைப் புலிகள் வரி விதித்திருப்பது உண்மை தான். அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படவில்லை.

வரி விதிக்கப்படாத பொருள்களின் விலையை அவர்கள் விதித்த வரித்தொகையையும்விட அதிகமாகப் பொருள்களை சில வர்த்தகர்கள் விற்கிறார்கள்.

அதாவது புலிகள் ஒரு பொருளுக்கு விதிக்கும் வரியைப் பாவனையாளர்களிடமிருந்து பெறுவதுடன் இந்த வரியைக் காரணம் காட்டி மேலதிகமாகவும் இலாபம் சம்பாதிக்கும் வர்த்தகர்களுமிருக்கிறார்கள்.

சகல பொருட்களும் விலையேறிவிட்டன. காரணம் விடுதலைப்புலிகள் எல்லாவற்றுக்குமே வரிவிதிப்பதுதான் என்ற பிரசாரமும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில்தான் யாழ். மாவட்ட வர்த்தகசங்கப் பிரதிநிதிகள் தனிப்பட்ட வர்த்தகர்கள் ஆகியோரை அழைத்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) மக்கள் மீது பளுவைச்சுமத்த வேண்டாம் என்று கேட்டிருக்கிறார்.

''விடுதலைப்புலிகள் வரி அறவிடுகிறார்கள் எனக் கூறி பொருள்களின் விலைகளைக்கூட்டி மக்களைச் சுரண்டும் வர்த்தகர்கள்மீதுகடும்நடவடிக்கைஎடுக்கப்படும்'' என்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார் திரு. மகேந்திரராசா.

''விடுதலைப்புலிகள் வரிவிதித்துள்ள பொருள்கள் வரிவிதிக்கப்படாதபொருள்கள் என வேறுபடுத்தி வரி விதிக்கப்படுகின்றபொருள்கள் சிவப்பு எழுத்துக்களிலும் உண்மையானவிலையும் வரியினால் அதிகரிக்கப்பட்ட விலையும் எழுதி விலைப்பட்டியல் ஒவ்வொரு வர்த்தக நிலையத்திலும் தொங்கவிடப்படவேண்டும்'' என்று திரு. மகேந்திரராசா கூறியிருக்கிறார்.

இது உடனடியாகச்செயற்படவேண்டும்: விலைப் பட்டியலில் உள்ள விலைப்படியே பொருள்கள் விற்கப் படுகின்றனவா என்பதையும் கண்காணிக்கவேண்டியதும் அவசியமாகும்.

வர்த்தகர்களிடமிருந்து இலாபத்தில் ஒரு பகுதியையே போர் நிதியாகப் பெறப்படுகின்றது என்பதையும் திரு. மகேந்திரராசா தெளிவாக்கியுள்ளார்.

வர்த்தகர்கள் தங்களை சிறிதளவும் பாதிக்காமல் எல்லாவற்றையும் மக்கள் மீது சுமத்தி விட்டுப் பழியைப் புலிகள் மேல் போடுவது பெரும் அநியாயம்:

மக்கள் எவ்வளவென்று தான் சுமப்பது; எத்தனை காலம் தான் சுமக்க முடியும்?

# செஞ்சிலுவைச் சங்க தினம் முல்லைத்தீவில் சிரமதானம்

(முல்லைத்தீவு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கம் அம்மாவட்டத்தில் உள்ள ஐந்து அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிரமதானத்தை மேற்கொண்டது.

முல்லைத்தீவு மாவட்ட ஆஸ்பத்திரி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி ஒட்டுச்சுட்டான் வைத்தியசாலை, மாங்குளம் கிராமிய வைத்தியசாலை மல்லாவி கிராமிய ஆஸ்பத்திரி என்பவற்றில் சிரமதானம் இடம் பெற்றன.

இரத்ததானம் செய்ய பலர் விரும்பி வந்தபோதிலும் இரத்த வங்கி போன்ற வசதிகள் இல்லாததால் அதனை மேற்கொள்ள முடியவில்லை.

இதே சமயம் தாம் யாழ்ப்பாணத்திற்கு போய் இரத்த தானம் செய்ய விரும்பியதாகவும் ஆனால் வாகனவசதி கிடைக்காததால் அதனையும் மேற்கொள்ள முடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூலம், எமது விடுதலை இயக்கம் என்றுமில்லாதபடி பலம் வாய்ந்ததாக உருப்பெறும். மக்கள் வெறும் பார்வையாளர்களாக இருக்காமல், விடுதலைப் போராட்டத்தில் நேரடிப் பங்குதாரர்களாக மாறி விடும் வாய்ப்பை நாம் அளிக்கின்றோம்.

உண்மையான ஒரு தேசிய இயக்க ரீதியில் ஒன்று கலந்து ஒரு மாபெரும் தேசிய சக்தியை கட்டி எழுப்புவதானால் தமிழ், முஸ்லிம் மக்கள் எமது கட்சியில் சேர்ந்துகொள்ள வேண்டும். எமது மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழவேண்டுமென்றால் எமது கட்சிக்கு பக்கபலமாக அணிதிரள வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள்

பொறுப்பாளராக நியமிக்கப்பட வேண்டும். இவர் ஒரு இஸ்லாமியராக இருத்தல் நன்று.

2. முஸ்லிம் விவகார பொறுப்பாளருடன் இணைந்து செயலாற்றும் பொருட்டு முஸ்லிம்கள் பெரும் தொகையில் வாழும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம் அரசியல் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

3. முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரசார வேலைகள் மேற்கொண்டு எமது கட்சி அமைப்பை, முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பும் பிரதான பொறுப்புகள் முஸ்லிம் விவகாரப் பொறுப்பாளரையும், முஸ்லிம் அரசியல் அமைப்பாளரையும் சாரும். இவர்கள் மாதந்தோறும் தமது

பெற்ற பெரியார்கள், மௌலவிகள் உட்பட, தொழில் ரீதியாக சகல மக்களின் பிரதிநிதித்துவம் அடங்கும் வகையில் இந்த இணக்க அவைகள் அமைதல் வேண்டும். கிராம ரீதியாக எழும் சமூகப்பிரச்சினைகளுக்கு இணக்கம் காண்பதுடன், கிரிமினல் குற்றங்கள்

நடத்தப்படவேண்டும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் குரலாக இந்தப் பத்திரிகை அமையவேண்டும்.

8. தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையையும், தமிழ் - முஸ்லிம் தாயகத்தின் பாதுகாப்பையும் தமிழ்-முஸ்லிம் தேசிய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் முஸ்லிம் பகுதிகளில் அரசியல் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும். எமது கட்சியின் இலட்சியம், கொள்கைத்திட்

கதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

வழமைபோல் தேர்த் திருவிழாவன்று ஆலய அன்னதான சபையினரால் அன்னதானமும் திருவிழாக் காலமாகிய பத்து நாட்களும் செல்வா இளைஞர் மன்றத்தினால் தாக சாந்தியும் வழங்கப்படும். (22)

## தமிழீழ இணக்க மன்றுக்களை உருவாக்குங்கள்

தமிழீழப் பிரதேசமெங்கும் தமிழீழ இணக்க மன்றுக்களை உருவாக்குவதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது. உங்கள் பகுதிகளில் இதுவரை இணக்க மன்றுகள் உருவாக்கப் படாது இருந்தால் உங்கள் பகுதி இணக்க மன்றுப் பொறுப்பாளர் அல்லது பிரதேசப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு உங்கள் பகுதிகளில் இணக்க மன்றுகளை உருவாக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வீதி விபத்தில் ஐவர் பலி!

(கோவை)

கோயம்புத்தூருக்கு அருகே நேற்று நடந்த வீதி விபத்தொன்றில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

மருதமலை முருகன் கோயிலுக்குச் சென்று விட்டு ஒரு மோட்டார் வானில் திரும்பிக் கொண்டிருந்த யாத்திரிகர்கள் எதிரே வந்த கல்லு லொறியுடன்மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது. இரு குழந்தைகள் உட்பட ஐவர் மாண்டனர்.

பதினேழு பேர்காயமடைந்தனர்.

# குறிகாட்டுவான் பஸ் சேவை திடீரென இடை நிறுத்தம்

(தீவுப்பகுதி)

யாழ். குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டுவரும் 776ஆம் இலக்க பஸ் வண்டி கடந்த ஆறாம் திகதியிலிருந்து மூன்று நாட்கள் நண்பகலுக்குப் பின்னர் சேவையில் ஈடுபடவில்லை.

ஆறாந் திகதி மாலை ஆறு மணிக்கு சேவைக்கு அனுப்ப வேண்டிய மேற்படி பேருந்து பஸ் நிலையத்தில் இருந்த போதிலும் ஒரு அதிகாரியால் சேவைக்கு விடாமல் தடுக்கப் பட்டதுடன்பஸ்சுக்காககாத்து நின்ற பயணிகளுக்கு பஸ் போகாது என்று கூறப்பட்டு அவர்கள் துரத்தப்பட்டனர்.

மேலும் 7 ஆந் திகதி மாலை ஆறு மணிக்கு சேவையில் ஈடுபட வேண்டிய பஸ் பழுது என்று சொல்லப்பட்டு கோண்டாவில் டிப்போவுக்கு அனுப்பப்பட்டது.

அன்று 776ஆம் இலக்க பஸ் வண்டி இருந்தும் மாலை ஆறுமணிக்கு குறிகாட்டுவானுக்கு அனுப்பப்படாமல் வேறு பாதைமாற்றி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகளின் அசட்டையீனத்தால் குறிகாட்டுவான் பஸ் பிரயாணிகள் பெரிதும் கஸ்ட நிலைக்கு ஆளாகின்றனர்.

(15)

## கணக்காளராக

(அம்பாறை)

கல்முனைக் கல்வி மாவட்ட பிரதம கல்வி அதிகாரி அலுவலகத்தில் கடந்த சிலகாலமாக நிரந்தர கணக்காளர் ஒருவர் இல்லாததன் காரணமாக பாடசாலைகளின் மதிய உணவு நிதி விடயம், ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் கணக்கு வேலைகள், கொடுப்பனவுகள் யாவும் தடைப்பட்டிருந்தன.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு: காஸ்ரோ எடுத்த நடவடிக்கையின் பயனாக மேற்படி காரியாலயத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றி வந்த திரு. கணேசமூர்த்தி தற்காலிக கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார். (48)

# கிராமிய மக்களிடையே சுயகைத்தொழில் முயற்சி

(சாவகச்சேரி)

கிராமிய ரீதியில் கிராமிய மக்களிடையே சுய கைத் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை ஒவ்வோர் கிராமிய சிற்றூரவைகள்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திப் பகுதியில் மேற் கொள்ளும்.

ஒவ்வோர் கிராமத்திலும் இலகுவில் கிடைக்கக் கூடிய இயற்கை வளங்களான மூலப் பொருட்களைக் கொண்டே இந்த கைத்தொழில் அபிவிருத்திக்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்படும்.

இந்த அடிப்படையிலே கிராமிய மூலப் பொருட்கள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைகளை கிராமிய சிற்றூரவைகளின் தலைவர்கள் செயலாளர்கள் கிராமசேவை அலுவலர்கள் இணைந்து அவ்வக் கிராமங்களிலுள்ள முதியவர்கள் அனுபவஸ்தர் நிபுணத்துவமுடையோர் ஆகியோரின் ஆலோசனைகளையும் பெற்று ஆய்வுகளை நடத்த வேண்டும் பின் தமது அறிக்கையை வட்டத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பனம் தும்பு, தென்னம் தும்பு போன்றகைத்தொழில் பனை ஓலை, நார், ஈர்க்கு, புல் போன்றவற்றைக் கொண்டு பன்னவேலை பாய் முடைதல் கூடை முடைதல் போன்ற பல்வேறு தொழில்களை சுயதொழிலாகவோ குடிசைக் கைத் தொழிலாகவோ வசதிக்கேற்ப மக்கள் செய்து கொள்ள முடியும்.

இது பற்றிய கலந்துரையாடல் ஒன்றை நுணாவில் அலுவலகத்தில் வட்டத் தலைவர் திரு. கந்தன் தலைமையில் சிற்றூரவை தலைவர்களும், செயலாளர்களும், கிராமசேவையாளர்களும் வெள்ளியன்று மாலை நடத்தினர்.

தென்மராட்சிப் பிரதேச காரியாலயஉதவியாளர் திரு. ரீ. ஆர். இராஜகுலசிங்கமும் பல நுணுக்கங்களை விளக்கினார்.

வட்டத்தலைவர்திரு. கந்தன் இது பற்றிக் குறிப்பிடுகையில் கிராமங்கள் மத்தியில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் மக்களிடையே வேலை இல்லா கஷ்டத்தை ஒழிக்கவும் இது ஒரு ஆரம்ப நடவடிக்கை என்றார். (35)

## ஓய்வு பெற்றார்

(தீவுப்பகுதி)

வேலணைப் பகுதி நெசவு நிலையங்களின் பொறுப்பு ஆசிரியையான திருமதி திரு ஞானசெல்வம் பத்மாவதி நெசவு ஆசிரியை பதவியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் வேலணையில் கடமையாற்ற முன்பு மன்னார் பறப்பாங்கண்டல் நெசவு நிலையத்திலும் பொறுப்பாசிரியையாக கடமையாற்றியிருந்தார்.

வேலணை கிழக்கு மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவியாக நீண்ட பல ஆண்டுகள் கடமையாற்றி வருகின்ற இவர் அத்துடன் புங்குடுதீவு சர்வோதய இயக்கத்தின் வேலணை கிழக்கு நிதிய சேவையாளராகவும் கடமையாற்றி பல பொதுத் தொண்டுகளைச் செய்து வருகின்றார். (15)

# இப்படியும் ஆசிரிய நியமனமா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

கல்முனைக் கல்வி அலுவலகம் வழங்கிய பயிலுநர் ஆசிரிய நியமனத்தின் போது நடன ஆசிரிய பதவிக்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் நடனம் சாதாரண சித்தி பெற்றவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ் வேளை க. பொ. த (உ/த) உடன் க. பொ. த (சா/த) இல் நடனம் திறமைச் சித்தியுள்ளவரும் க. பொ, த. உயர் தரத்தில் நடனம் திறமைச் சித்தி உள்ள மற்றொருவரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவை மேன் முறையீட்டின் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எனவே விசேட பாடத்தில் திறமையுள்ளோர் நியமனம் பெறுவார்களா?

**மக்கள் மடல்**

அல்லது விசேட பாட ஆசிரிய பதவிக்கு க. பொ. த. (சா/த) இல் சாதாரண சித்தி போதுமானது எனக் கல்வித் திணைக்களம் கூறுகின்றதா? எனப் பொதுமக்கள் கேட்கின்றனர்.

சிவநாதன்.

காரைதீவு.

## உதைபந்தாட்டம்

(கரவெட்டி)

சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் மேற்படி கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் வதிரி பொம்பேஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதியதில் 1: 1 என்றகோல் கணக்கில் சிவானந்தா விளையாட்டுக்கழகம் பொம்பேஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றியை கொடுத்தது.

தொடர்ந்து நடைபெற்ற காட்சிப் போட்டியில் வதிரி டையமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 1: 6 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (18)

ஈழநாதம்

# மலையகத்தில் தமிழர்கள் தீவிரவாதிகளென கைது!

## நாடு கடத்துவதற்கு முதல் எச்சரிக்கை நடவடிக்கை

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ்த்தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் கைதுசெய்யப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மலையக மக்கள் முன்னணித்தலைவர் திரு. சந்திரசேகரன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியக்கடவுச்சீட்டு வைத்துள்ள ஒருலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினரை நாடுகடத்த வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதை எதிர்த்து மலையகத்தில் ஆர்ப்பாட்டமோ பிரச்சினைகளோ தலைதூக்காமல் தடுப்பதற்காகவே முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டது போன்ற நிலைமை மலையகத்தில் ஏற்படாமலும் ஜே. வி. பி. பிரச்சினை மேலும் மோசமாகாமலும் தடுக்கும் பொருட்டே மலையகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## காத்தான்குடி முஸ்லிம்களுக்கு காணி வழங்கப்படவில்லை!

(காத்தான்குடி)

ஜனாதிபதியின் நாடளாவிய காணிவழங்கும் திட்டத்தின் கீழ் காணியற்றோரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பித்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையும் சமீபத்தில் நடந்தது. ஆனால் அதன்பின்னர் எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமலிருப்பது குறித்து பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை கடந்த பெப்ரவரி மாதம் கிராமசேவகர்கள் ஊடாக உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

[illegible]திட்டத்தின் கீழ் காணி வழங்க முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

வருட வருமானமாக 12000 ரூபாவுக்குட்பட்ட தொகையைப் பெறும் குடும்பங்களுக்கும், இவ்வகுப்பைச் சேர்ந்த காணியற்றவர்களுக்கும், தொழில் வாய்ப்பற்றவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ்காணி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது.

வடகிழக்கு மாகாணத்தில் அநேகமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வாகரைப் பகுதியில் மதுரங்குளம் என்னுமிடத்தில் 75வீ[illegible]ம்களைக் கொண்ட [illegible]யில் காத்தான்குடிப்பிரதேச முஸ்லிம்களுக்கு காணி ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பரந்தன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பூர்த்தியாகி அவை இயங்கும் நிலையிலுள்ளது.

தேவையான உபகரணங்கள் புதிய மோட்டார் என்பன களஞ்சியத்தில் பழுதடையாமல் இருந்தது. 1984 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட புதிய மோட்டார் தொழிற்சாலை மூடப்பட்டமையினால் பொருத்தப்படவில்லை.

இது பழுதடையாத நிலையில் இருப்பதால் பாவனைக்கு உகந்ததாக உள்ளது. இல்லையேல் ஜேர்மனியிலிருந்து புதியது ஒன்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு . இதனால் தொழிற்சாலையின் செயல்பாடு மேலும் 6 மாத காலம் தாமதித்திருக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

120 செல் அறைகளில் 30 தான் திருத்தம் செய்து தற்போது முடிக்கப்பட்டுள்ளது. ஏனையவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு படிப்படியாக திருத்தம் செய்யப்படும்.

தொழிற்சாலையின் தொழிற் சங்கங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் அவர்களது சேவை மனப்பான்மை பாராட்டிற்குரியது.

ஜனாதிபதி தொழிற்சாலை இயங்க வேண்டுமென்று ஆர்வமுடன் இருக்கிறார் எனவும் தெரிவித்தார். (51)

## சட்டவிரோத மின் பாவனைக்கு புலிகள் தடை

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பகுதியில் சட்டவிரோத மின்சாரப் பாவனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடைவிதித்துள்ளனர்.

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றிருப்போர்(தெருமின் இணைப்புக் கம்பிகளில் கொழுவி) உடனடியாக அதனை நிறுத்தவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

புலிகளின் இந்த அறிவுறுத்தலை மீறி சட்ட விரோதமாக எவராவது மின்சாரம் பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப்பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரம் எச்சரித்துள்ளார். (53)

## ஆக்கிரமிப்பு . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்தியப்படையை வெளியேற்றுவதை தடுப்பதற்காக ஈ.பி.ஆர்.எல்.எப்இனர் பல சூழ்ச்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அப்பாவிகளான முஸ்லிம் றிசேவ்பொலிஸாரைவெட்டிக் கொன்று அதன்மூலம் தமிழ்/முஸ்லிம் கலவரங்கலை உருவாக்க முயன்றனர்.

எல்லைப்புறங்களிலுள்ள சிங்கள மக்களையும், மற்றும் சிங்களப் படையினரையும் கொன்று சிங்கள, தமிழ் கலவரங்களை உருவாக்கி அதன் மூலம் காலம்காலமாக இந்திய ஆக்கிரமிப்புப் படையை இத்தீவில் இருத்துவதற்கு ஈ. பி. ஆர்.எல் எப் எடுத்த முயற்சிகளையும் சிறிலங்கா அரசு நன்கு அறிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இன்று அவ்விதம் அன்னிய ஆக்கிரமிப்புச் சக்தி ஒன்றுக்கு இத்தீவை அடகு வைக்க முயன்ற ஒரு தேச விரோதக் கும்பலுடன் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்களமக்களையும் அவமதிக்கும் செயலாகவே கருதவேண்டியுள்ளது.

இப்பேச்சுவார்த்தையானது தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்காக நடாத்தப்படவில்லை. இப்பேச்சுவார்த்தையின் நோக்கங்களும் விளைவுகளும் தமிழ்பேசும் மக்களுக்கு விரோதமானதாக அமையும் என்பதால் தமிழ்பேசும் மக்கள் சார்பில் இப்பேச்சுவார்த்தைக்கு எமது ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றோம் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## தமிழ் ஈழப் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

வடக்குகிழக்கு மாகாண சபையில் ஈழமக்கள் குடியரசு என்று முதல்வர் வரதராஜப் பெருமாள் பிரகடனத் தீர்மானத்தை நிறைவேற்றியது துரதிர்ஷ்டமான ஒரு நிகழ்ச்சி என்று இக்குழுவினர் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவிடம் தெரிவித்து அதற்காக மன்னிப்புக் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் பத்தொன்பது அம்சக்கோரிக்கையை திரு. பிறேமச்சந்திரன் அமைச்சர் ரஞ்சனிடம் கையளித்து இதன் அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாமெனத் தெரிவித்தாராம்.

இந்தப் பத்தொன்பது அம்சக் கோரிக்கை சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பித்து பேசுவதற்குப் பொருத்தமானதெனத் தெரிவித்த அமைச்சர் ரஞ்சன் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள முன்வருமாறு ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினருக்கு அழைப்புவிடுத்தாராம்.

இதுபற்றித் தாங்கள் தீவிரமாகப் பரிசீலனை செய்து முடிவு சொல்வதாக ஈ.பி.ஆர் எல்.எவ் குழுவினர் பதிலளித்தனராம்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சட்டம், ஒழுங்கு நிலைமை, அமைதியின்மை, மாகாண சபை, ஜனநாயக அமைப்புக்கள் செயற்படாமை பற்றிக் குறிப்பிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் குழு கவலை தெரிவித்துக் கொண்டதாம்.

### நாபாவைச் சந்தித்த பின்னர்

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைச் சந்திக்கச் செல்லும் முன்னர் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்த திரு.எஸ். பிரேமச்சந்திரன் தாம் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்று பொதுச்செயலாளர் திரு.பத்மநாபாவையும் மற்றும் ஈ. பி. ஆர்.எல்.எவ் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசிய பின்னரே இலங்கை அரசுடன் பேசுவது பற்றி முடிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப்பேசுவீர்களா? என்று நிருபர்கள் கேட்டதற்கு திரு. பிரேமச்சந்திரன் பின்வருமாறு சொன்னார்.

அரசாங்க ஆதரவிலுள்ள சமாதானக்குழுவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் இணைந்து கொள்ள வேண்டும். ஏனைய குழுக்கள் சமாதானக் குழுவில் இணைந்துள்ளன. இவர்களும் அதில் இணைந்த நிலையிலேயே அவர்களுடன் நாம் பேச முடியும்.

## நிந்தவூர் கிட்டங்கி வீதி திருத்தப்படாது உள்ளது

(நிந்தவூர்)

நிந்தவூர் கிட்டங்கி வீதிபல வருடகாலமாக திருத்தப்படாது படுமோசமான நிலையில் இருக்கின்றது.

பள்ளமும், படு குழிகளும் நிறைந்து காணப்படும் இந்த வீதியைச் செப்பனிட்டு திருத்தி அமைப்பதில் புறக்கணிப்புக் காட்டப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சிறுமழை பெய்தாலும் இந்த வீதியில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி நிற்பதுடன் சைக்கிள் மற்றும் வாகனங்களைச் செலுத்தி செல்ல முடியாத அவலமும் ஏற்படுகின்றது.

இந்த முக்கிய வீதியைச் சீரமைப்பதற்கென கருங்கற்கள் கொண்டுவரப்பட்டு வீதியின் இருமருங்குகளிலும் குவிக்கப்பட்டு பல மாதங்களாகியும் எந்த வேலையும் ஆரம்பிக்கப் படவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனைப் பிரிவினர் பாராமுகமாகவே இருந்து வருவதாகப் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## ராதா ஞாபகார்த்த தமிழ்த் திறன் போட்டி

(வண்ணார்பண்ணை)

வண்-வடமேற்கு ஐயனார் கோவிலடி சனசமூக நிலையத்தினர் வீர மரணமடைந்த முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி லெப்டினன். கேர்ணல் ராதா (க. ஹரிச்சந்திரா) அவர்களது 3வது ஆண்டு ஞாபகார்த்தமாக தமிழ்த் திறன் போட்டியினை நாளை மறுதினம் (18-5-90) யாழ். பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் மாலை 4-30 மணிக்கு நடாத்தவுள்ளனர்.

இப்போட்டிகள் அனைத்திலும் வண்ணார் பண்ணை-வடமேற்கு கிராமசேவகர் (ஜே-49) பிரிவில் நிரந்தரமாக வசிக்கின்ற மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

தமிழ்த் திறன் போட்டிகளானது பாலர் பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என்ற அடிப்படையில் நடைபெறும்.

மேற்படி பிரிவிலுள்ளவர்களுக்கு பேச்சு, எழுத்து, உறுப்பெழுத்து, சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் நடாத்தப்படும்.

ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்களுக்கு 20-5-90 அன்று ஐயனார் கோவிலடியில் நடைபெறும் மாபெரும் நினைவு தின விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும்.

## மோசடி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதை தொடர்ந்து வரி அறவீட்டாளர்களுடன் அவர்களை கண்காணிக்கவென அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் இதனால் வரி அறவீட்டாளர்கள் பழைய சலுகை வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைக்குள்ளாகியதால் கடந்த காலத்தில் வரி அறவீட்டாளர்களால் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டு வந்த தொகைப்பணத்திலிருந்து அதன் ஐம்பது வீதம் தினமும் அதிகரித்துள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)

## சாலை விபத்தில் 5 பேர் பலி

(சென்னை)

சென்னை தாம்பரம் அருகே நேற்றுக்காலை ஏற்பட்ட சாலை விபத்தொன்றில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் சென்று கொண்டிருந்த ஆட்டோ ரிஷ்ஷோவொன்றும் செங்கல்பட்டிலிருந்துதாம்பரம் வந்துகொண்டிருந்த லொறியொன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதால் இவ் விபத்துஏற்பட்டது,

இதில் ஆட்டோவில் பயணம் செய்த மூன்று பேர் ஸ்தலத்திலேயேபலியானார்கள். மேலும் இரண்டு பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்து போனார்கள் லொறி சாரதி கைது செய்யப்பட்டார்.

## தொலைபேசி சீர்கேடு

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று இ போ.ச டிப்போவின் தொலைபேசி எப்போதும் மௌனம் [illegible]

நிந்தவூர் [illegible]

கோரப்பட்டபோது காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பித்தனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையும் சமீபத்தில் நடந்தது. ஆனால் அதன்பின்னர் எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமலிருப்பது குறித்து பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை கடந்த பெப்ரவரி மாதம் கிராமசேவகர்கள் ஊடாக உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

ஜனசக்தி உரித்தாவணம் பெற்றும் காணியற்ற நிலையிலுள்ளவர்களே பெரும்பாலும் ஜனாதிபதியின் இத்திட்டத்தின் கீழ் காணி பெற விண்ணப்பித்துள்ளனர்.

தொழிலற்ற காணியில்லாத இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் வருட வருமானமாக 12000 ரூபாவுக்குட்பட்ட தொகையைப் பெறும் குடும்பங்களுக்கும், இவ்வகுப்பைச் சேர்ந்த காணியற்றவர்களுக்கும், தொழில் வாய்ப்பற்றவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ்காணி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது.

வடகிழக்கு மாகாணத்தில் அநேகமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வாகரைப் பகுதியில் மதுரங்குளம் என்னுமிடத்தில் 75வீ[illegible]ம்களைக் கொண்ட ஒரு[illegible]யில் காத்தான்குடிப்பிரதேச முஸ்லிம்களுக்கு காணி ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேர்முகப் பரீட்சைகளில் தெரிவுசெய்யப்பட்ட காணியற்ற நூற்றுக்கும் அதிகமான காத்தான்குடி முஸ்லிம்கள் இக்காணி கிடைக்குமா என இப்போது கேட்டு வருகிறார்கள். (55)

தான் திருத்தம் செய்து தற்போது முடிக்கப்பட்டுள்ளது. ஏனையவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு படிப்படியாக திருத்தம் செய்யப்படும்.

தொழிற்சாலையின் தொழிற் சங்கங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் அவர்களது சேவை மனப்பான்மை பாராட்டிற்குரியது.

ஜனாதிபதி தொழிற்சாலை இயங்க வேண்டுமென்று ஆர்வமுடன் இருக்கிறார் எனவும் தெரிவித்தார். (51)

---

## சாவகச்சேரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு 54 லட்சம் ரூபா தேவை எனத் தாம் மதிப்பிட்டுள்ளதாகவும் மின்சாரப் பகுதிக்கென 44 லட்சம் ரூபா மேலதிகமாகத் தேவை எனத் தாம் மதிப்பிட்டு உள்ளூராட்சி இலாகாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

லங்கா அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்களமக்களையும் அவமதிக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இப்பேச்சுவார்த்தையானது தமிழ் பேசும் மக்களின் நலன்களிற்காக நடாத்தப்படவில்லை. இப்பேச்சுவார்த்தையின் நோக்கங்களும் விளைவுகளும் தமிழ்பேசும் மக்களுக்கு விரோதமானதாக அமையும் என்பதால் தமிழ்பேசும் மக்கள் சார்பில் இப்பேச்சுவார்த்தைக்கு எமது ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றோம் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

## குட்டிப்புலம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கைப் பிரயோகித்து வசதி படைத்த பாடசாலைகளுக்குச் சென்றுவிடுகின்றனர்; இது வேதனைக்குரியது.

இதனாலேயே இங்கு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது இவ்வாறு அவர் சொன்னார்.

ஆர்.எல்.எவ் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசிய பின்னரே இலங்கை அரசுடன் பேசுவது பற்றி முடிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப்பேசுவீர்களா? என்று நிருபர்கள் கேட்டதற்கு திரு. பிரேமச்சந்திரன் பின்வருமாறு சொன்னார்.

அரசாங்க ஆதரவிலுள்ள சமாதானக்குழுவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் இணைந்து கொள்ள வேண்டும். ஏனைய குழுக்கள் சமாதானக் குழுவில் இணைந்துள்ளன. இவர்களும் அதில் இணைந்த நிலையிலேயே அவர்களுடன் நாம் பேச முடியும்.

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் மக்கள் படும் துன்பங்கள், கொலைகள் பற்றிஅமைச்சருடன் நடத்தும்பேச்சுக்களில் எடுத்துக் கூறப்போவதாகத் திரு. பிரேமச்சந்திரன் நிருபர்களிடம் தெரிவித்திருந்தார்.

பேச்சுக்களின் போது இது பற்றி எதுவும் பேசப்படவில்லை என்று தெரிகிறது. சாம் தம்பிமுத்துவின்கொலை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இப்பேச்சுவார்த்தைதொடரும் என்று திரு பிரேமச்சந்திரன் தெரிவித்தார். ஆனால் திகதியேதும் குறிப்பிடப்படவில்லை.

---

## 3 மாதங்களின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கும், பொலிஸ்காரர்களுக்கும் இடையே பிரச்சினையை ஏற்படுத்தச் சிலர் முயற்சித்துவருவதாகத் தெரிவித்த அவர், நாம் உண்மை நிலையை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவித்து வருகிறோம்என்றும்குறிப்பிட்டார். (தி)

---

## சட்டவிரோத

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான ஒருவேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்ட விரோத மின்பாவனை பல கோணங்களிலும் தென்மராட்சியின் அபிவிருத்திகளை பாதிக்கின்றது. சட்டபூர்வமான மின்பாவனையாளர்களுக்கும் பலவித பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. எனவே இதுபற்றிமுன்பும் பத்திரிகைச்செய்திகள்மூலம்நிறுத்தும்படிகோரியும் இதுதொடர்கிறது.

எனவே இதுஒரு இறுதியான வேண்டுகோள். இதை மீறுபவர்களுக்கு மன்னிப்புக்கு இடமில்லை. மின்சார சபையினர் எமது உறுப்பினர்கள் முக்கிய கண்காணிப்பு மேற்கொண்டு வருகிறார்கள். கண்டுபிடிக்கும் பட்சத்தில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பட்டதை தொடர்ந்து வரி அறவீட்டாளர்களுடன் அவர்களை கண்காணிக்கவென அதிகாரிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் இதனால் வரி அறவீட்டாளர்கள் பழைய சலுகை வழங்குவதை நிறுத்த வேண்டிய நிலைக்குள்ளாகிய தால் கடந்த காலத்தில் வரி அறவீட்டாளர்களால் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டு வந்த தொகைப்பணத்திலிருந்து அதன் ஐம்பது வீதம் தினமும் அதிகரித்துள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)

---

## நிந்தவூர்

(1ஆம்பக்க தொடர்ச்சி)

வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

---

## இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளனர்.

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில் இங்கு உள்ளதை அந்த ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது என திரு. தொண்டமான் தெரிவித்தார்.

விபத்துஏற்பட்டது.

இதில் ஆட்டோவில் பயணம் செய்த மூன்று பேர் ஸ்தலத்திலேயேபலியானார்கள். மேலும் இரண்டு பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்து போனார்கள் லொறி சாரதி கைது செய்யப்பட்டார்.

---

## தொலைபேசி சீர்கேடு

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று இ போ.ச டிப்போவின் தொலைபேசி எப்போதும் மௌனம் சாதித்துக்கொண்டிருக்கிறதாம்.

இதுவரை ஐந்துக்கு மேற்பட்ட பெட்டிகள் மாற்றியும், அதன் இணைப்புக் கம்பிகள் மாற்றியும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

இது பற்றிப்பலமுறை தொலைபேசிப் பரிவர்த்தனை நிலைய உயர் அதிகாரிகளுடன் தொடர்வு கொண்டும் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லையாம் என அதன் முகாமையாளர்திரு. பி பீ. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (46)

---

# மரண அறிவித்தல்

## திரு. V. M. சண்முகம் அவர்கள்

யாழ்ப்பாணம், கொழும்பு பிரபல வர்த்தகர் திரு. V. M. சண்முகம் அவர்கள் 13-5-90 இல் காலமானார்.

இவர் காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு, சுந்தரம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், V. M. சண்முகம் அன்ட் பிறதர்(85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், 74, பழைய சோனக தெரு, கொழும்பு) நிறுவன உரிமையாளரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புக்கணவரும், கணேசமூர்த்தியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற V. M. பரமநாதன் (உரிமையாளர் V. M. பரமநாதன் அன்ட் சன்ஸ் யாழ்ப்பாணம், கொழும்பு), திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை, V. M. கந்தையா, (இளைப்பாறிய வருமான வரி மதிப்பீட்டாளர், உரிமையாளர் வி. முருகேசு ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்), V. M. பேரம்பலம் (சாட்டட் அக்கவுண்டன் அவுஸ்திரேலியா, உரிமையாளர் V. M. பேரம்பலம் அன்ட் கோ, சாட்டட் அக்கவுண்டன்ஸ் யாழ்ப்பாணம், கொழும்பு), திருமதி செல்லம்மா யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 16-5-90 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் காரைநகர் சம்பந்தர் கண்டி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் இடம் பெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

V. M. P. முருகேசு

(R/481)


**CLASSES FOR ACCOUNTANCY**

**EXAM'S NOV - DEC - 1990**

| | |
|---|---|
| **C. I. M. A.** | |
| STAGE I | 19. 5. 1990 |
| STAGE II AND | 9. 6. 1990 |
| STAGE III | 9. 6. 1990 |
| **A. A. T. (London)** | |
| PRELIM | 19. 5. 1990 |
| INTER AND | 9. 6. 1990 |
| FINALS | 9. 6. 1990 |
| **A. A. T. (Srilanka)** | |
| STAGE I | 19. 5. 1990 |
| STAGE II AND | July 1990 |
| STAGE III | July 1990 |
| **I. A. B.** | |
| FOUNDATION | 19. 5. 1990 |
| INTER AND | 9. 6. 1990 |
| FINALS | 9. 6. 1990 |
| AND | |
| **I. D. P. M.** | |
| PART I | 19. 5. 1990 |

மேலதிக விபரங்களுக்கு

**NORTH CEYLON**

**TECHNICAL INSTITUTE**

(Result Oreiented Institute in North)

*14, ST. PETER'S LANE*

*HOSPITAL ROAD,*

**JAFFNA**


# 90 ஆம்நாள் நினைவு அஞ்சலி



## கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்

(நயினாதீவு, திருநெல்வேலி)

**உதயம்** 16-05-1943

**அஸ்தமனம்** 15-02-1990

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாகபூஷணி அம்பாளை இறைஞ்சுகின்றோம்

இங்ஙனம்

தங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், தந்தை, தாய்,
மாமா, மாமி, உற்றார், உறவினர்.

(R-483)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.